# JANAVINODINI.

# ஜநவிநோதிநி.

இல. 7.] ஜுலை மீ 1890. [புஸ்த. XXI.

CONTENTS.

The influence of climate on national character................ 145
Catechism on various subjects (*Continued*):— (*on Electricity, Lightning, Thunder, &c.*)......... 148
The Life of a Bear, Chapter XXII........................... 157
Right goes to the right.—A story (*Continued*)........................ 160
Scientific and historical explanations of a few ceremonies connected with Hindu marriages..... 165
News and Notes........................ 168

அட்டவணை.

தேசத்தார்குணம் தேசகுணத்திற் கேற்றது.............................. 145
விவிதவிஷயவிளக்கவினாவிடை (தொடர்ச்சி):— (மின்சாரம்,மின்னல்,இடிமுதலியவற்றைக்குறித்து) 148
ஓர் கரடியின் கதை, 22-ம் அத்தியாயம் .................................. 157
அவரவருரிமை அவரவரடைவர்.— ஒரு கதை (தொடர்ச்சி).......... 160
இந்து விவாகச் சடங்குகள் சிலவற்றின் சாஸ்திரோக்த சரித்திர பூர்வக விவரணம்........................ 165
வர்த்தமானக் குறிப்புகள்............ 168

MADRAS.

Published by the

MADRAS SCHOOL BOOK AND VERNACULAR LITERATURE SOCIETY,
OLD COLLEGE, NUNGUMBAKAM.

ஜநவிநோதினி.

இல. 7.] ஜூலை மீ 1890. [புஸ்த. XXI.

## தேசத்தார்குணம் தேசகுணத்திற்கேற்றது.

---

உலகத்தில் மானிடர் தோன்றிய நாள் தொடங்கிச் சிறிதுகாலம் ஆசியாகாண்டத்தின் கீழ்ப்பாரிசத்தில் தங்கியிருந்து நாளாவர்த்தியில் நாற்புறமும் பரவினார்களென்று பூர்வசரித்திரத்தினால் தெரியவருகிறது. இவ்வாறு நாற்புறமும் பரவிய ஜனங்கள் எங்கெந்தத்தேசங்களில் போய்த் தங்கினார்களோ அந்தந்தத்தேசங்களிலுள்ள நிலம்-நீர்-காற்று முதலியவற்றின் குணவிசேஷங்களுக்கேற்றபடி அவர்களுடைய நடை-உடை - பாவனை குணம்முதலியவைகள் வேறுபட்டுக்கொண்டு வருகின்றன. இந்தக் குணங்கள் வம்சபரம்பரையாக அந்தந்தத் தேசத்தாருக்கு அமைந்து நாளாவர்த்தியில் அவர்களுக்கு இயற்கைக் குணங்களாகவே ஆய்விடுகின்றன. சீதளப் பிரதேசங்களிலும் பர்வதச் சாரல்களிலும் வசிப்போர் பெரும்பாலும் அயர்விலா ஊக்கமுள்ளவர்களாகவும், பகைவரை அச்சமின்றி எதிர்க்கத்தக்க தைரியசாலிகளாகவுமிருக்கிறார்கள். ஏனெனில், அவ்விடங்களிலே அவர்களுக்கு வேண்டிய ஆகாரங்களாகிய கந்தமூலபலாதிகள் கிடைப்பதற்கிடமில்லையாகையால் அவர்கள் மிகவும் மெய்வருந்தி வேலைசெய்து ஆகாரத்திற்காகச் சில தானியவகைகளையும், வேட்டையாடி மிருகம் பட்சிமுதலியவற்றையும் சேகரிக்க வேண்டியவர்களாயிருக்கிறார்கள். அந்தப் பிரதேசங்களில் வசிப்போர் இவ்வகையான நெடுநாளைய வாழ்க்கையினாலே நாளாவர்த்தியில் ஊக்கமுடைமையையும் மனோதைரியத்தையும் இயற்கைக் குணங்களாகப் பெறுகிறார்கள்.

அதிசீதளமும் அதிஉஷ்ணமுமிராத மத்தியதரப் பிரதேசங்களிலிருப்போர்க்குத் தங்களுடைய தேசங்களின் நீர் வளப்பங் காரணமாகவும், நிலவளப்பங் காரணமாகவும் ஏராளமாய்ப் பலவகையான கந்தமூலபலாதிகள் விளைகிறபடியாலும், அவர்கள் அதிகமாய் மெய்வருந்த வேண்டிய அவசியமிராதபடியாலும் நாளாவர்த்தியில் இயற்கையிலேயே சோம்பற்றன்மையுடையவர்களாய்விடுகிறார்கள். உரோமபுரியை இராஜதானியாகக் கொண்டிருந்த உரோமராஜ்ஜியத்தார் மத்தியதரப் பிரதேசவாசிகளானபடியால் நெடுநாளைய சொகுசான வாழ்க்

கையினாலே நாளாவர்க்கியில் பலங்குன்றி இராஜ்ஜியத்தை இழந்தனர். அந்த இராஜ்ஜியத்தைச் சின்னபின்னப் படுத்துவதற்காக வடக்கே சீதளப் பிரதேசங்களிலிருந்துவந்த சிலமிலேச்சர்கள் பிரதமத்தில் அதிசூரர்களாகவும் தைரியசாலிகளாகவு மிருந்தபோதினும் அவர்கள் உரோமராஜ்ஜியத்தில் வந்து தங்கிச் சிலவருஷமானபிறகு உரோமரைப்போலவே பலஹீனர்களாய்விட்டார்கள்.

அந்தந்தத்தேசங்களின் சீதோஷ்ணநிலைமை முதலிய வேறுபாடுகளுக்கேற்றபடி அவரவர்கள் நடை-உடை-பாவனை முதலியவற்றிலும் வேறுபடுகிறார்கள். அவர்களுடைய உணவாதிகளும் வேறுபடுகின்றன. சட்டதிட்டங்களும் குணகுணங்களும் தோற்றங்களும் ஏற்கவே மாறுகின்றன. நம்முடைய இந்தியாதேசத்தில் கந்தமூல பலாதிகள் ஏராளமாய் எங்கும் விளைகின்றபடியால் பிராணிகளைக் கொன்று புலால் புசிப்பது பெரும் பாபகாரியமாகுமென்னும் சித்தாந்தத்தை இந்துக்கள் கொண்டிருக்கிறார்கள். பசும் புல்லும் தலைகாட்டுவதற்கிடமிராத சீதளப் பிரதேசங்களிலே புலால் புசிப்பதை ஜனங்கள் பாபமென்று கொள்ளவே மாட்டார்கள்.

நம்முடைய தேசத்தில் ஸ்திரீ புருஷர்களுக்குப் பெரும்பாலும் இளமைப் பருவத்திலேயே மணம்புரிவதென்னும் வழக்கத்தை யூகித்துப்பார்க்கையில் அது நம்முடைய தேசத்தின் உஷ்ணத்திற்கு ஏற்றதா யிருப்பதாகத் தெரியவருகிறது. நம்முடைய தேசத்திலே பன்னிரண்டுவயதிலெல்லாம் பெண்கள் பருவமடைந்துவிடுகிறார்கள். சீமை முதலிய பிரதேசங்களிலே இருபது இருபத்திரண்டு வயது வரையில் பெண்கள் பருவமடைவதில்லை. ஆகையால் இந்தத் தேசத்திலே கல்வி கேள்வி முதலியவற்றினால் அறிவு நன்றாய் விளக்கம் பெறுவதற்கு முன்னமே பெண்கள் கல்வியை விட்டொழிக்கவேண்டிய பருவத்தைப்பெற்று ஆடவர்க்கு வாழ்க்கைத் துணைவிகளாய் விடுகிறபடியால் புருஷர்களைவிடப் பெண்கள் மிகவும் புத்திகுறைந்தவர்களாக இருக்கிறார்கள். இதுகாரணமாகத்தான் இத்தேசத்துப் பெண்கள் எவ்வித சுவயேச்சையையும் பெறாமல் புருஷர்களுடைய ஊழியத்தைச்செய்துகொண்டு தாழ்ந்த நிலைமையிலிருக்கவேண்டியவர்களாயிருக்கிறார்கள். இங்கிலாந்து முதலிய தேசங்களிலோ வென்றால் பெண்கள் பருவமடைவதற்குக் குறைந்தது 20 அல்லது 22 வயதாகிறபடியால் அதுவரையில் ஆண்பிள்ளைகளைப்போலவே கல்வியில் தேர்ச்சியடைந்து விவேகிகளாகின்றார்கள். இதுகாரணமாகத்தான் அந்தத் தேசங்களிலே ஸ்திரீகள் சுவயேச்சை பெற்றுப்புருஷர்களைப்போலவே விவகாரங்களை நடத்தக் கூடியவர்களாயிருக்கிறார்கள். மேற்போந்த காரணங்களினாலே நம்தேசத்துப் புருஷர்கள் தங்களுடைய ஸ்திரீகளுக்கு மரியாதை பாராட்டுவதைவிட இங்கிலாந்து முதலிய பிரதேசங்களிலுள்ள புருஷர்கள் தங்களுடைய ஸ்திரீகளுக்கு அதிகமரி

யாதை பாராட்டுகிறார்கள். இதுபோன்றபல பிரமாணங்களினாலே அந்தந்தத் தேசத்தாருடைய நடை-உடை-பாவனை-குணம் முதலியயாவும் அந்தந்தத்தேசங்களின்சீதோஷ்ண நிலைமைமுதலிய குண விசேஷங்களுக்கேற்றபடி அமைகின்றன.

முற்காலத்திலே ஐரோப்பாவில் வெனிஸ் என்னும்தேசத்தாரும், தற்காலத்திலே இங்கிலாந்து-ஹாலந்து முதலிய தேசத்தாரும் வர்த்தகத்தில் மிகவும் சாமர்த்தியரா யிருப்பதற்குக் காரணமெல்லாம் அவரவர்களுடைய தேசங்கள் வர்த்தக விஷயங்களுக்கு அநுகூலமாக அமைந்திருப்பதேயாம். எப்போது ஒரு ஜாதியார் தங்களுடைய தேசங்கள் சமுத்திரத்திற்குச் சமீபமாயிருக்கப்பெற்று வர்த்தகத்தில் சிறப்படைகிறார்களோ அப்போதே அவர்கள் நயநஷ்டங்களைப் பற்றி யோசனைமுதலிய வர்த்தக சம்பந்தமான குணங்களையும் பெறுவார்கள். அப்படிப்பட்ட குணங்கள் அந்தத்தேசத்தவர்க்கு இப்போதிருப்பதை நாம் கண்கூடாகக்காணலாம். இந்துக்கள் நெடுங்காலமாய் விவசாயமென்னும் பயிர்த்தொழிலையே மேலாகக்கையாண்டு வந்தபடியால், அப்பயிர்த்தொழிலுக்குப் பசுமாடுகள் இன்றியமையாதனவாதலின் அவர்கள் அந்தப்பிராணிகளைத் தெய்வத்தைப்போற் போற்றிவருகிறார்களென்று ஒருசாஸ்திரியார் அபிப்பிராயப்படுகிறார். இந்துக்கள் உஷ்ணப்பிரதேசவாசிகளானபடியால் அடிக்கடி தம்முடைய தேகத்தையும் உடையையும் வீடுகளையும் சுசியாய் வைத்திருக்கவேண்டியது அவசியம். இதுகாரணமாகத்தான் தினம் ஸ்நானம்செய்வது முதலாகிய ஒழுக்கங்களும் அளவிறந்தஆசார அநுஷ்டானங்களும் இந்துக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றன. மொத்தத்தில் இவைகளுக்கெல்லாம் தேசத்தின் சீதோஷ்ணநிலைமை முதலிய வேறுபாடுகளே காரணமாயிருக்கின்றன.

அந்தந்தத் தேச நிலைமைக்கேற்றபடியே அவரவர்களுடைய விருப்பு வெறுப்பு முதலிய குணங்களும் வேறுபடுகின்றன. இந்துக்களாகிய நாம் உஷ்ணப்பிரதேசவாசிகளானபடியால் சீதளத்தை விரும்புகின்றோம். இங்கிலாந்திலுள்ளோர் சீதளப் பிரதேசவாசிகளானபடியால் உஷ்ணத்தை விரும்புகின்றார்கள். இவ்விருப்புவெறுப்புகளுக் கேற்றபடியே அவரவர்களுடைய பாஷைநடையும் வேறுபடுகின்றது. இந்துக்களாகிய நாம் அன்பை விசேஷித்துக் கூறுமிடத்து "தண்ணளி" என்று சொல்வதை ஆங்கிலேயபாஷையில் மொழிபெயர்க்க வேண்டுமானால் "Warm affection" வெப்பமாகிய அன்பு என்று பொருள்படக் கூறவேண்டும். இதுபோன்ற வித்தியாசங்களுக்கெல்லாம் தேசநிலைமையைப்பற்றிய வித்தியாசமே காரணமாயிருக்கின்றது.

## விவிதவிஷயவிளக்கவினுவிடை.

(தொடர்ச்சி.)

38. சிடன்.—ஐயா, நேற்று யான் தங்களைக்கேட்ட வினுக்களுக்குத் தாங்கள் அன்புடன் அளித்தவிடைகளைப்பிறகு சித்தசமாதானத்துடன் யோசித்துக்கொண்டிருக்கையில் இன்னும் சில சந்தேகங்கள் தோன்றின. அவைகளையும் இப்போது சமுகத்தில் கேட்டுத்தெளிய விரும்புகிறேன். சிலசமயங்களில் பூமியிலேமழைத்துளி எவ்வளவும் விழாமலிருக்க மேகத்தினின்றும் மழைபெய்வதுபோல் கண்ணுக்குத் தோன்றுகிறதல்லவா? அத்தோற்றத்திற்குக் காரணம் யாது?

ஆசிரியர்.—அப்படிப்பட்டதருணங்களிலே மேகத்தின்சிலபாகம் அடியில்வரும் சீதளக்காற்று தாக்குவதனுலே மழையாயிறங்கிச் சிறிதுதூரம் கீழேவருவது வாஸ்தவந்தான். ஆனுல் அம்மழைத்தாரைகள் பூமியில்வந்துவிழ்வதற்குமுன் அடியில் மிகவும் உஷ்ணமானகாற்று வராளமாய்மோதிக்கொண்டிருந்தாலும் மேல்நோக்கிச்சென்று கொண்டிருந்தாலும் அவ்வுஷ்ணத்தினுலே, அதற்குமேலிருந்துவந்துகொண்டிருக்கும் மழைத்தாரைகள்மீண்டும் நீராவியாகி மேலேயேபோய்விடும். இப்படிப்பட்டதோற்றங்களை அடிக்கடி நாம் காண்பதில்லை. ஆகாயத்தில் சீதோஷ்ணநிலைமைகள் க்ஷணத்திற்கு க்ஷணம் மாறிக்கொண்டிருக்கும்சிலவிசேஷகாலங்களிலேதான் அத்தோற்றங்களை நாம் காண்பது.

39. சி.—ஆகாயத்தில் மின்னல் தோன்றுவதற்குக்காரணம் யாது?

ஆ.—மின்னல் இப்படிப்பட்டதென்பதையும், அதுதோன்றுவதற்குக்காரணம் இன்னதென்பதையும் தெளிவாயறிந்துகொள்ளவேண்டுமானுல் ஈஸ்வரசிருஷ்டியிலமைந்துள்ள மின்சாரம் என்னும் ஒரு பொருளின்குணத்தை நன்றாய் அறிந்துகொள்வது அவசியம்.

40. சி.—மின்சாரம் என்பது யாது? அதன் குணவிசேஷத்தை எனக்கு நன்ருய்ப்புலப்படக்கூறவேண்டும்.

ஆ.—மின்சாரம் இன்னதென்று வரையறுத்துக்கூற ஒருவராலும் முடியாது. அப்படிப்பட்ட பொருள் ஒன்று ஈஸ்வரசிருஷ்டியில் அமைந்திருப்பதை, அதுசெய்யுங்காரியங்களினுல் நாம் அறிந்துகொள்ளலாம். மின்னல் தோன்றும்போதும், உத்தரதுருவப்பிரதேசங்களில் (Aurora Borealis) அரோராபோரியாலிஸ் என்னும் ஓர்வகை விண்ணொளி தோன்றும்போதும் மின்சாரம் என்னும் அற்புதமான பதார்த்தத்தின் லட்சணம் இப்படிப்பட்டதென்பதை நாமறிந்துகொள்ளலாம். நிச்சலவாயு எப்படிநம்மை நாற்புறமுஞ் சூழ்ந்து அலைமோதிக்கொண்டிருக்கின்றதோ அப்படியே மின்சாரமென்னும் பொருளும் உலகத்திலுள்ள பூதபௌதிகப்பொருள்கள் யாவற்றிலும் உள்ளும் புறம்புமாகப்பரவியிருக்கிறது. சமுத்திரத்திலுள்ளஜலம் ஒருகாலத்தில் ஓரிடத்திலே சிலகாரணங்களினுலே அலைமோதி மேலெழும்புவதும் வே

ற்றோரிடத்திலே அழுந்திச் சலனமற்றிருப்பதும்போல் மின்சாரமென்
னும்பொருள் உலகத்தில் சில இடங்களிலே மேலெழுந்து தன் சொ
ரூபத்தைக் காட்டுவதும் பிற இடங்களிலே அடங்கி அமைதிபெறுவ
துமாயிருக்கிறது. இந்தமின்சாரம் சிலமாதிரியானபொருள்கள் மூல
மாய் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அதிகசுலபமாகவும் வேக
மாகவும் செல்லும். வேறே சிலமாதிரியான பொருள்கள்மூலமாக அது
அவ்வாறு செல்லமாட்டாது. நானுவித உலோகங்களும் மரமும் விற
கு முதலியவற்றை எரித்ததனுலுண்டாகும் கரிகளும் ஜலமும் உயிரு
ள்ளபிராணிகளின் தேகங்களும் பசுமையாயிருக்கும் மரம்-செடி முத
லியவைகளும் நெருப்புச்சுவாலையும் புகையும் நீராவி முதலிய பொ
ருள்களும் மின்சாரத்தை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சுல
பமாய்க் கொண்டுபோகத்தக்க கருவிகளாயிருக்கின்றன. துரு-பல
வகையான எண்ணெய்கள்-சுண்ணநீறு-சுண்ணக்கட்டி-பலவகையான
பிசின்-கற்பூரம்-சலவைக்கல்-பீங்கான் முதலிய மட்பாண்டங்கள்-வற
ட்சியான ஆவி முதலிய வாயு-பலவகையான இறகு-மயிர்-கம்பளம்-ப
ட்டு - பலவகையானகண்ணுடி - ஒளிஊடுருவிச்செல்லத்தக்கபளிங்கு
முதலாகிய கற்கள்-மெழுகு-அம்பர் முதலியபொருள்கள் மின்சாரம்
ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தம்மூலமாகப்போவதற்கு இ
டங்கொடாதபொருள்களாகும். இந்தபதார்த்தங்களுக்குள்ளே சில ஈர
மின்றி வறட்சியாயிருக்கும்போது மின்சாரம் தம்மூலமாகப்போவதற்
கு இடந்தாவிடினும் அவை ஜலத்தில் நனைந்து ஈரமாகும்போது மின்
சாரம் தம்மூலமாகப்போவதற்கு இடந்தரத்தக்கவைகளாகின்றன. மி
ன்சாரத்தை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சுலபமாய்க்கொண்
டுபோகத்தக்க இரண்டு உலோகக்கம்பிகளை ஒன்றையொன்று இணைந்
திருக்கும்படி பொருத்திவைத்து அக்கம்பிகளின் ஒருபுறத்திலிருக்கிற
மின்சாரத்தைமற்றொருபுறத்திற்குப் போகும்படிசெய்வோமானுல் மி
ன்சாரம் சரசரவென்று யாதோரிடையூறில்லாமலும், ஒருவர்கண்ணுக்
குந் தெரியாமலும்போய்க்கொண்டிருக்கும். இவ்வாறு மின்சாரம் அ
க்கம்பிகளின் மூலமாகப் போய்க்கொண்டிருக்கையில் ஒன்றோடொன்
று இணைந்து சம்பந்தப்பட்டிருக்கிற கம்பிகளைச்சற்றே விலக்குவோ
மானுல் உடனே மின்சாரம் கண்தெறித்துப்போகும்படியாகப் பளிச்
சென்று மின்னுவதை நாம்காணலாம். இவ்விஷயத்தை நீ நன்றாய் ஞா
பகத்தில் வைக்கவேண்டும். ஏனெனில், கண்ணுக்குப்புலப்படாமலே
ஆகாயத்தில் சொரூபமின்றியிருக்கும் மின்சாரம் மின்னலாகத்தோன்
றுவதற்கு நான் காரணங்கூறும்போது இவ்விஷயத்தை உதகரிக்கப்
போகிறேன். மின்சாரத்துக்கு மற்றொரு முக்கியமானகுணமுண்டு.
மின்சாரம் எங்கும்வியாபகமாயிருந்தபோதினும் அடுத்தடுத்துள்ள இ
ரண்டுபொருள்களுக்குள்ளே ஒருபொருளினிடத்து மின்சாரம் மிகுதி
யாகவும் மற்றொருபொருளினிடத்து மின்சாரம் குறைவாகவுமிருக்கு
மாகுல், அவ்வாறு மின்சாரம் தான்மிகுதியாயிருக்கும்பொருளைவிட்டு

மிகக்குறைவாயிருக்கும் மற்றொருபொருளினிடத்துப் போய்க்கலந்து வித்தியாசத்தைச் சமப்படுத்திவிடுகிறது. மின்சாரத்திற்குள்ள இந்த குணத்தையும் நீ ஞாபகத்தில்வைக்கவேண்டும்.

41. சி.—மின்சாரத்திற்குப்பொதுவாயுள்ள குணங்களைப்பற்றித் தாங்கள் விரிவாய்க்கூறிக்கொண்டுவந்த விஷயங்களையான் ஐயமறத்தெரிந்துகொண்டேன். யான்முன்னேவினவியபடி மின்னலுக்குக்காரணம் இஃதென்பதைக்கூறவேண்டும்.

ஆ.—இரண்டுமேகத்தொகுப்புக்கள் சமீபமாகவரும்போது ஒன்றில் மின்சாரம் அதிகமாகவும் மற்றொன்றில் மின்சாரம் குறைவாகவுமிருக்குமானால், மேலே யான் மின்சாரத்தின் பொதுலட்சணத்தைக் குறித்துச் சொல்லிக்கொண்டுவந்தபோது பிரஸ்தாபித்தபடி மின்சாரம் தான் அதிகமாயிருக்கும் மேகத்தினின்றும் குறைவாயிருக்கும்மேகத்திற்குத்திடீரென்றுபாய்ந்து இரண்டுமேகத்தொகுப்புக்களையும் சமப்படுத்துகிறது. மின்சாரம் அதிகமாயிருக்கும் மேகத்தொகுப்பை க என்று குறிப்பிடுவோம். மின்சாரம் குறைவாயிருக்கும் மேகத்தொகுப்பை ப என்று குறிப்பிடுவோம். க என்னும்மேகமும் ப என்னும்மேகமும் சமீபத்தில்வரும்போது ப என்னும்மேகத்தில் க என்னும்மேகத்திலிருப்பதைவிட மின்சாரம்எவ்வளவு குறைவாயிருக்கிறதோ அக்குறைவைப் பூர்த்திசெய்து அவ்விரண்டுமேகத்தொகுப்புக்களையும் ஓரே அளவுள்ள மின்சாரத்தையுடைய பொருள்களாயிருக்கும்படி செய்வதற்காக, க என்னும்மேகத்தொகுப்பில் மிச்சமாயுள்ளமின்சாரம் ப என்னும்மேகத்தொகுப்புக்குட் பிரவேசிக்கின்றது. இவ்வாறுமின்சாரம் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குப்பாயும்போது இடையிலுள்ள வாயு ஈரமாக மின்சாரப்போக்குக்கு அநுகூலமாயிருக்குமானால் மின்னல் ஜோதிதோன்றாமலிருக்கும். அவ்வாறின்றி இடையிலுள்ள வாயு வறட்சியாய் மின்சாரப்போக்குக்குப் பிரதிகூலமானதாயிருக்குமாயின், முன்னே மின்சாரத்தின் பொதுலட்சணங்களைப்பற்றி நான்சொல்லிக்கொண்டுவந்தபோது பிரஸ்தாபித்தபிரகாரம் பளிச்சென்றுமின்னும். இதுதான் மின்னலுக்குக்காரணம். மின்சாரம் தன் போக்குக்குப் பிரதிகூலமான பொருளண்டைவரும்போதுதான் அது ஜோதியாய்க் கண்ணுக்குப் புலப்படுமென்று முன்னமே நான் கூறினேனல்லவா?

42. சி.—மேகத்தொகுப்புக்களில் மின்சாரம் எப்படியுண்டாகிறது?

ஆ.—பூமியிலுள்ள நீர்நிலைகளிலிருந்து சூரியவெப்பத்தினாலே ஜலம் நீராவியாய் எழுவதனாலும், அவ்வாறு எழுந்த நீராவி சீதோஷ்ண வேறுபாடுகளையுடைய வாயுவினால் அடிக்கடி அலைமோதப்படுவதனாலும், மேகங்களுக்கு முதற்காரணமாயுள்ள பரமாணுக்கள் இத்தியாதி பலகாரணங்களினாலே ஒன்றோடொன்று தாக்குகிறபடியால் மேகத்தொகுப்புக்களில் மின்சாரம் திரளுகிறது.

43. வி.—மின்னல் மின்னுமானுல் உடனே மழை ஏன்பெய்யவேண்டும்?

ஆ.—நீராவிமயமானமேகத்தில் அளவுக்கதிகமாக மின்சாரம்தங்கியிருக்குமானுல் அம்மேகம் குளிர்காற்றுக்கு மேலேவந்தபோதினும் அது ஜலமாயிறுகமாட்டாது. அதில் மிச்சமாயிருக்கும் மின்சாரம் மற்றொரு மேகத்தொகுப்புக்குச் சென்றவுடனே நீராவி ஜலரூபமாயிறுகிவிடும். ஆகையினுல்தான் மிச்சமாயிருக்கும் மின்சாரம் ஒருமேகத்தொகுப்பைவிட்டு மற்றொரு மேகத்தொகுப்புக்கு விரைந்தோடுவதற் கறிகுறியாக மின்னல் மின்னியவுடன் மழைபெய்கிறது. சில சமயங்களில் மின்னுமலே மழைபெய்தல்கூடும். மழைபெய்வதற்கு வேண்டியதெல்லாம் மிச்சமாயிருக்கும் மின்சாரம் மேகத்தொகுப்பை விட்டகலவேண்டுவதேயாம்.

44. வி.—மின்னல் பற்பலசமயங்களிலே பற்பலரூபங்களாகப் பிரகாசிக்கிறதல்லவா? அதற்குக்காரணம் யாது?

ஆ.—மின்னல் சிலசமயங்களில் வளைந்து வளைந்து கோணல்கோணலாகவும், சிலசமயங்களில் நேராகவும், சிலசமயங்களில் நாற்புறமுங் கிளைத்துமுள்ளைப்போலவும், சிலசமயங்களில் தட்டையாய்ப் பாய் விரித்ததுபோலவும் பிரகாசிப்பதை நாம் காண்கிறோம். இதற்குமுறையே காரணங்கூறுகிறேன் கேட்பாயாக. முதலாவது.—ஆகாயத்தில் மின்சாரம் எங்கும் பரவியிருந்தபோதினும் சீதோஷ்ணநிலைமைவேறுபாடுகளினுலே மின்சாரம் சில இடங்களில் அமிதமாகவும், சில இடங்களில் மிகக்குறைந்துமிருப்பதுண்டு. அவ்வாறு மின்சாரம் தான் அதிகமாய்ச்சேர்ந்துள்ள இடத்தைவிட்டுப் பெயர்ந்து குறைவாயிருக்கும் இடங்களிற்போய்ப் பரவுவதற்காகச்செல்லுகையில் இடையிலேயிருக்கும்பலவகையானவாயுக்களுக்குள்ளே தான் ஊடுருவிச்செல்வதற்குப் பிரதிகூலமாயிருக்கும் வாயுவைவிட்டு நீங்கித் தனக்கு அநுகூலமாயிருக்கும் வாயுமூலமாகவே பாய்ந்தோடுகிறது. இவ்வாறு மின்சாரம் தான் ஊடுருவிச்செல்வதற்கு அநுகூலமாயிருக்கும்பொருளையே நாடிப்போகவேண்டியதாயிருப்பதால், பலவகையான வாயுக்கள் ஆகாயத்தில் நிறைந்துள்ள சமயத்திலே மின்சாரம் இங்கு மங்கும்வளைந்து வளைந்து கோணல்கோணலாகப் பிரகாசித்துத் தனக்கநுகூலமான மார்க்கத்தைத்தேடிச் செல்லுகின்றது. இரண்டாவது.—மின்சாரம் தான் விட்டு நீங்கும்பொருளும் போய்ச்சேரும்பொருளும் அதிசமீபத்திலிருக்குமானுல் அப்போது அது நேராகப்பிரகாசித்துச் செல்லுகின்றது. மூன்றவது.—மின்சாரம் ஒருபொருளைவிட்டு மற்றொருபொருளுக்குப் போகும்போது இடையில் அதற்கு முற்றும்பிரதிகூலமான ஆவியேநாவது வழிவிடாமல் எதிர்த்துநிற்குமானுல் அப்போது மின்சாரம் அதன்மேல்தாக்கி முள்ளைப்போல் நாற்புறமும் கிளைத்து ஜோதியாய்ப் பிரகாசிக்கின்றது. நான்காவது.—மின்னல் நெடுந்தூரத்தில் அடிவா

னத்திற்கப்புறம்தோன்றும்போது அதன் மேற்பாகம்மாத்திரம் நாமிருக்குமிடத்திற்குப் பிரதிபலிக்குமானல் அப்போது அது தட்டையாய்ப்பாய்விரித்ததுபோல் நம்முடைய கண்ணுக்குத் தோன்றுகின்றது.

45. சி.—சிலசமயங்களில் மின்னல் மின்னும்போது நீலநிறமாய்த்தோன்றுகிறதல்லவா? அதற்குக்காரணம் யாதோ?

ஆ.—சமுத்திரத்திலுள்ளமரக்கலங்கள் முதலியவற்றையும் நிலத்திலுள்ள பெரியகட்டட முதலியவற்றையும் நிலைகுலைக்கத்தக்க பெருங்காற்றுமழை உண்டாகுமென்பதற்கு நீலநிறமான மின்னல் அறிகுறி. ஆகாயத்தில் மின்சாரம் அதிகமாய்நிரம்பி ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்கு அதிவேகமாய்ப்பாய்ந்து நீராவிமுதலிய யாவற்றையும் கலக்குந் தருணத்தில்தான் அப்படிப்பட்ட நிறம் தோன்றுவது வழக்கம்.

46. சி.—இதுவரையில் தாங்கள் மின்னலின் குணத்தைப்பற்றிச் சொல்லிக்கொண்டுவந்த விஷயங்களை நன்குணர்ந்தேன். இனி இடிமுழக்கம் உண்டாவதற்குக் காரணம் யாது?

ஆ.—மின்சாரம் ஓரிடத்தைவிட்டு மற்றோரிடத்திற்குப் பாயும்போது அது இடையிலுள்ளபலவகையான வாயுக்களைக்கிழித்துக்கொண்டு போவதனாலும், அவ்வாறு மின்சாரத்திற்குத் திடீரென்றுவழிவிட்டு விலகிய வாயுக்கள்மீண்டும் முன்போலவே அதிவேகமாய் வந்து ஒன்று சேர்வதனாலும் பேரிரைச்சலுண்டாகின்றது.

47. சி.—இடிமுழக்கம் பற்பல சமயங்களில் பற்பல மாதிரியாகக் கேட்பதற்குக்காரணம் யாது?

ஆ.—பெரியமலைகள் சமீபத்திலிருக்கும் பிரதேசங்களிலே இடிமுழக்கம் பேரிரைச்சலோடு பத்துப்பன்னிரண்டு நிமிஷம்வரையில் விடாமல் சிங்க கர்ஜ்ஜனையைப்போல் கேட்டுக்கொண்டேயிருக்கும். ஏனெனில், அம்முழக்கத்தினாலுண்டாகும் சப்தம் அம்மலைகளின்மேல் தாக்கி மாறொலி அல்லது எதிரொலியாகப் பிரதிபலிக்கிறது. சுற்றுப்பக்கங்களிலே மலைகளிராமல் பூமிசமமாயிருக்குமானல் இடிமுழக்கம் நீடித்துக்கேட்காமல் இரண்டொரு நிமிஷத்தில் நின்றுவிடும்.

48. சி.—சிலசமயங்களில் மின்னல் மின்னியும் இடிமுழக்கம்கேளாமலிருப்பது யாது காரணத்தினல்?

ஆ.—இதற்கு இரண்டு காரணங்கள் கூறலாம். மின்னலும் இடியும் நெடுந்தூரத்திலுண்டாகியும் மின்னல்மாத்திரம் நம்முடைய கண்ணுக்குப் புலப்பட்டு இடிமுழக்கம் நம்முடைய காதுக்குக் கேளாமல் போகக்கூடும்; அல்லது இரண்டுமேகத்தொகுப்புக்கள் அதிசமீபமாயிருக்கும்போது மின்சாரம் ஒன்றிலிருந்து மற்றொன்றிற்பாயுமானல் இடிமுழக்கம் உண்டாவதற்கிடமிராது.

49. சி.—மின்சாரம் மேலேதாங்கள் சொல்லிக்கொண்டுவந்தபடி செய்யும்விசித்திரங்களெல்லாம் பூமிக்குமேலே இவ்வளவு தூரத்திலென்று கணக்கிடக்கூடுமா ?

ஆ.—ஆம், ஒருவாறு கணக்கிடக்கூடும். சப்தம் ஒருவினடியில் கால் மைல்வீதம் செல்லுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகையால் மின்னல்ஜோதியைக்கண்ட நாலுவினடிக்குப்பிறகு இடிமுழக்கத்தை நாம்கேட்போமாகில் மின்சாரம் மின்னலாக ஜொலித்த இடம் ஒருமைலுக்குமேலே யிருக்கவேண்டுமென்று நாம் நிச்சயிக்கலாம். வயதுவந்து நல்லதேகாரோக்கிய ஸ்திதியிலுள்ள ஒரு புருஷனுடைய கைநாடி வினடிக்கொருதடவை அடிக்கிறதென்று கணக்கேற்பட்டிருக்கிறபடியால் மின்னல்தோன்றும் நேரத்திற்கும் இடிமுழக்கம் கேட்கும்நேரத்திற்குமிடையில் நாடி நரம்பு எத்தனைதடவை அடிக்கிறதோ அதற்கேற்றபடி மின்னல்தோன்றுந் தூரத்தை நாம் மேலேகாட்டிய பிரமாணத்தைக்கொண்டு நிச்சயித்துக்கொள்ளலாம்.

50. சி.—மின்னல்தோன்றிய சிறிதுநேரம்பொறுத்து இடிமுழக்கம் ஏன்கேட்கவேண்டும்? மின்னல்தோன்றும்போதே இடிமுழக்கம் கேட்கலாகாதா?

ஆ.—மின்னலும் இடிமுழக்கமும் வாஸ்தவத்தில் சற்றேறக்குறைய ஏககாலத்திலேதானுண்டாகின்றன. ஆனல் ஓசையைவிட வெளிச்சம் அதிவேகமாய்ப்பாவுகிறபடியால் நாம்முன்னமே மின்னல் வெளிச்சத்தைப்பார்க்கவும்,பிறகுதூரத்திற்கேற்றபடி இடிமுழக்கத்தைக் கேட்கவும் நேரிடுகிறது.

51. சி.—மின்சாரம் தாங்கள்சொல்லிக்கொண்டுவந்தபடி இடம்விட்டுப்பெயர்வதனுலும் மின்னல்தோன்றுவதனுலும் மழைபெய்வதென்னும்பெருத்த நன்மையேயன்றி வேறே ஏதாவது நன்மைகள் உலகத்தார்க்குண்டா ?

ஆ.—மிக்கநன்மைகள் உள. மேலே யான் கூறிக்கொண்டுவந்த மின்சாரத்தின்தொழில்கள் நாம் உஸ்வாஸ நிஸ்வாஸஞ்செய்யும் நிச்சலவாயுவிலிருக்கும் பற்பல அசுத்தங்களையெல்லாம்போக்கி,நானுவித லட்சணங்களையுடைய ஆவிகளையெல்லாம் ஆகாயத்தில்சமப்படுத்தி ஒன்றாய்க்கலந்து சகலஜீவராசிகளுக்கும் நன்மையைத்தருகின்றன.

52. சி.—மின்னல் மின்னி இடியிடித்துக் காற்றுமழை மும்மாமாயடிக்கும்போது சிலசமயங்களில் கட்டடங்களின்மேலும் செடிமுதலியவற்றின்மேலும் இடிவிழுகிறதே அதற்குக்காரணம் யாது ?

ஆ.—மின்சாரம் மிச்சமாயிருக்கும் ஒருமேகத்தொகுப்பினின்றும் அதுமிகவும் குறைவாயிருக்கும் மற்றொருமேகத்தொகுப்புக்குப்பாய்ந்தோடுமியல்பு மின்சாரத்துக்கிருக்கிறதென்று அதன் பொதுலட்சணத்தைப்பற்றி முன்னேநான் கூறிக்கொண்டுவந்தபோது பிரஸ்தாபி

த்தேனல்லவா ? அதேமாதிரியாகவே சண்டமாருதத்தோடு மழை மும்மரமாய்ப் பெய்யும்பொழுது பூமியிலிருக்கும் அளவைக்காட்டிலும் பூமிக்கு மேற்புறமாயுள்ள ஆகாயத்திலேமின்சாரம் அதிகப்பட்டிருப்ப தனுல் மின்சாரம் அக்குறைவைப் பூர்த்திசெய்து சமப்படுத்துவதற் காகப் பூமியை ஊடுருவிச்செல்ல நேரிடுகிறது. அவ்வாறு மின்சாரம் மேலிருந்து கீழேவருகையில் தான் ஊடுருவிச்செல்வதற்கு மிகவும் அநுகூலமான பொருள்களாகிய உயர்ந்தகட்டடங்கள், விருட்சங்கள் முதலியவற்றின் மூலமாகப் பூமிக்குள் இறங்கிவிடுகிறது. சில சந்தர்ப்பங்களிலே மனிதர்கள் முதலிய ஜீவப்பிராணிகளின் தேகங்கள் மின்சாரப் போக்குக்கு நாம் மேலேசொல்லியபடி மிகவும் அநுகூலமானவைகளாயிருக்கிறபடியால் மின்சாரம் அவற்றை ஊடுருவிச்செல்லும். அப்போது அவைகளுக்கு ஆபத்துநேரிடுமென்பதற்கு ஐயமில்லை.

53. சி.—பூமியிலிருந்து ஆகாயத்திற்கு மின்சாரம் ஏறிப்போவதுண்டோ?

ஆ.—ஆம், சிலசந்தர்ப்பங்களில் அப்படி ஏறுவதுமுண்டு.1859-ம் ஹு மார்ச் மாதத்தில் Dundry Church டண்ட்ரீ சர்ச் என்னும் தேவாலயத்தில் பூமியிலிருந்து மின்சாரம் திடீரென்று மேலெழும்பிக்கோபுரத்தை ஊடுருவிப்பிளந்துகொண்டு ஆகாயத்திற்சென்றது.இவ்வாறு பூமியினின்றும் மின்சாரம் மேலே போவது அடிக்கடி நாம் பார்க்கக் கூடிய விசித்திரமன்று ; ஆயினும் அது ஒவ்வோர் காலத்தில் நடக்கக்கூடிய விஷயமேயன்றிக் கேவலம் அசம்பாவிதமல்ல.

54. சி.—மின்சாரம் பெரும்பாலும் மேலிருந்துகீழிறங்கும்போதும் சிறுபான்மை கீழிருந்து மேலேறும்போதும் கட்டடங்கள் முதலியவற்றிற்காயினும் அவற்றிலுள்ள பிராணிகளுக்காயினும் ஆபத்து நேரிடாவகைக்கு நாம் செய்யவேண்டிய உபாயம் யாது?

ஆ.—உயர்ந்த கட்டடங்களின் கூரைமுதல் பூமிக்கடிவரையில் ஊடுருவிச் செல்லும்படி உலோகங்களினுற்செய்த கம்பிகளைப் பல இடங்களிலும் அமைத்துவைக்கவேண்டும். அவ்வாறு நாம் அமைத்துவைப்போமாகில் முன்னே யான் சொல்லியபடி மின்சாரம் ஊடுருவிச் செல்வதற்கு அநுகூலமான பொருள்களுக்குள்ளே உலோகங்களினுற்செய்த கம்பிகள் சிறந்தனவாகையால், ஒருவர்கண்ணுக்கும் புலப்படாமலும், அக்கட்டடத்திற்காவது அதிலுள்ளவர்களுக்காவது எவ்வித ஆபத்தையும் விளைக்காமலும் சரசரவென்று மின்சாரம் மேலிருந்து அக்கம்பிகளின் வழியாகப் பூமிக்குள் இறங்கிவிடும். அவ்வாறு மின்னலிறங்குங் கம்பிகள் அமையப்பெறாத கட்டடங்கள் மின்சாரத்திற்கு எதிர்த்து நிற்கிறபடியால் மின்சாரம் அவைகளின்மேல் மோதிப் பளிச்சென்று மின்னிவேகமாய் ஊடுருவி அக்கட்டடங்களை அழிப்பதுமன்றி அதிலுள்ளவர்களுக்கு ஆபத்தும் விளைக்கும். கட்டடங்களின் மேற்புறத்தில் வெளியே கம்பிகள் தோன்றுமானல் அவைக

வின் உருவழகு கெட்டுப்போகுமென்றெண்ணிச் சிலர் கூரைகளுக்கு மேற்புறமாயுள்ள அக்கம்பிகளை உலோகங்களினற்செய்த பதுமைகளாக அமைத்துவைக்கிறார்கள்.

55. கி.—சண்டமாருதத்தோடு மின்னல் மின்னிப் புசலடிக்கும்போது குளம் ஆறு முதலிய நீர் நிலைகளுக்குச் சமீபத்தில் போகக்கூடாதென்று பெரியோர் சொல்லுகிறார்களே, அதற்குக் காரணம் யாது?

ஆ.—இதுபோன்ற கேள்விகளுக்கு நான் விடைகூறுவதற்குமுன், என்னென்ன பொருள்கள் மின்சாரம் சுலபமாய் ஊடுருவிப்போவதற்கு அநுகூலமானவையென்றும், என்னென்னபொருள்கள் அதற்குப்பிரதிகூலமானவையென்றும் நான் ஆதியில் சொல்லியிருந்தேனே அவைகளையெல்லாம் நீ நன்றாய் ஞாபகப்படுத்திக் கொள்வாயாக. ஜலம் மின்சாரப்போக்குக்கு அநுகூலமானதல்லவா? அதனினும் நம்போலிய பிராணிகளுடைய தேகம் மிகவும் அநுகூலமானதல்லவா? ஆகையால், இடியிடித்து மின்னுங் காலங்களிலே நீர் நிலைகளுக்குச் சமீபமாக நாம் போவோமாகில் மின்சாரம் தனக்கு அநுகூலப்பொருளாகிய ஜலத்தைவிட்டு அதனினும் அநுகூலமான நம்முடைய தேகத்தில் பாயும்; அப்போது தோன்றும் ஜோதியினலே நமக்கு ஆபத்து நேரிடும்.

56. கி.—இடியிடித்து மின்னும்போது ஒருவன் தற்காப்பாகச் செய்துகொள்ள வேண்டியவிஷயங்கள் எவை? எந்தெந்தப் பொருள்களுக்குச் சமீபமாகப் போகக்கூடாது? எப்படியிருப்பது உத்தமம்?

ஆ.—அப்படிப்பட்ட தருணங்களிலே இரண்டுமூன்றடுக்குமெத்தை வீட்டுக்கட்டடத்தில் ஒருவன் இருப்பானுகில் அவன் அக்கட்டடத்தின் அடிப்பாகத்திலாவது எல்லா அடுக்குகளுக்கும் மேலடுக்கிலாவது இருப்பது நன்றல்ல. ஏனெனில், அக்கட்டடத்தின் அடிப்பாகத்தில் அவனிருப்பானுகில் பூமியிலிருந்து மின்சாரம்மேலுக்கேறும்போது அவனுக்கு ஆபத்துநேரிடக்கூடும். எல்லா அடுக்குகளுக்கும் மேலான அடுக்கிலிருப்பானுகில் அவனுடைய தேகம் கட்டடத்தின் மற்றப்பாகங்களைவிட மின்சாரப்போக்குக்கு மிகவும் அநுகூலமானபடியால் அதைவிட்டு அவன் தேகத்தில் ஊடுருவிப்பாய்ந்து ஆபத்துவிளைக்கும். ஆனபடியால், அப்படிப்பட்டகட்டடத்தின் மத்தியபாகத்திலே அவன் இருப்பது நல்லது. சாதாரணவீடுகளில் அப்படிப்பட்ட காலங்களிலிருப்பவர்களும் தத்தமக்குரிய அறைகளிலே சுவர் முதலியவற்றின் ஓரமாய்ச் சயனிக்காமல் கூடியவரையிலே அவ்வறையின் மத்தியபாகத்தில் சயனிப்பது சர்வோத்தமம். காற்றுமழை அடிக்கும்போது கூடியவரையில் கம்பளம் முதலியவற்றினுல் போர்த்துக்கொள்வதும், கம்பளத்தினுற்செய்யப்பட்ட ஆசனங்களிலிருப்பதும் சயனிப்பதும் உத்தமம். ஏனெனில், பலவகையான கம்பளங்கள் மின்சாரப்போக்கு

க்கு மிகவும் பிரதிகூலமான பொருள்களானபடியால் நம்முடைய தேகம் அவைகளினாலே சூழப்பெற்றிருக்குமாயின் மின்சாரத்தினால் ஆபத்து அதற்கு நேரிடாமலிருக்கும். இடியிடித்துப் பெருமழைபெய்யுந் தருணத்தில் அடுப்பண்டை சிலர் குளிர்காய்ந்துகொண்டிருப்பது வழக்கம். அவ்வாறு அத்தருணத்தில் செய்வது ஆபத்துக்கிடம். ஏனெனில், அந்த அடுப்பைச் சூழ்ந்துள்ள வெப்பமான நிச்சலவாயுவும் புகையும் கரிமுதலியவைகளும் மின்சாரப்போக்குக்கு மிகவும் அநுகூலமானபொருள்களானபடியால் அவைகளுக்குச் சமீபமாய் நாமிருப்போமானால் அந்தப் பொருள்களைவிட நம்முடைய தேகம் மின்சாரப்போக்குக்கு மிகவும் அநுகூலமானதாயிருக்கிறபடியினாலே மின்சாரம் அவைகளைவிட்டுத் திடீரென்று நம்முடைய தேகத்திற்பாயும். இவ்வாறு அடுப்பண்டை குளிர்காய்ந்துகொண்டிருந்த சிலர்க்கு ஆபத்து நேரிட்டதை நாம் சமாசாரப் பத்திரிகைகள் மூலமாகக் கேள்விப்படுகிறோம். இடி முழக்கமுண்டாகுங் காலத்தில் நம்முடைய ஜன்னல்களின் கதவுகளைச் சாற்றுவதற்காகக் கையைநீட்டும்போது கூடியவரையில் பக்கங்களிலுள்ள உலோகக் கம்பிகளில் கைபடாமலிருக்கப் பார்க்கவேண்டும். அத்தருணத்தில் நாம் வண்டிகளிலேறிப் போகவேண்டியதாய் நேரிடுமானால் கூடியவரையில் அவ்வண்டியின் பக்கங்களிற் சாயாமல் மத்தியில் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு போகவேண்டும். இதற்குக் காரணம் மேல் யாம் சொன்னதேயாம். இவ்விஷயத்தை நான் இன்னும் விரிக்கவேண்டியது அவசியமில்லை. இடியிடித்து மின்னல் மின்னிப் பெருமழைபெய்யும்போது நாம் கவனிக்கவேண்டிய விஷயங்களையெல்லாம் தொகுத்துச் சுருக்கி அடியில்வருமாறு கூறுகின்றேன்:--

மின்சாரப் போக்குக்கு அநுகூலமாயுள்ள பொருள்களுக்கு அதி சமீபமாயிருக்கக்கூடாது. ஆனால் உலோகத்தினாற் செய்யப்பட்ட கம்பிகள் அப்படிப்பட்ட பொருள்களேயாயினும் அவை மாத்திரம் தகுந்தபடி மேலிருந்து பூமிக்கு அடிவரையில் கட்டட முழுவதும் ஊடுருவிச் செல்லும்படி அமைக்கப்பட்டிருக்குமானால் அப்படிப்பட்டவைகளுக்குச் சமீபத்திலாவது அவையமைந்திருக்குங் கட்டடத்திலாவது இருந்தால் எவ்வித ஆபத்தும் நேரிடாது. சிலர் செடிகளுக்குக் கீழாகப்போய் நிற்கிறார்கள். அது எல்லா ஆபத்துக்களினும் பேராபத்துக்கிடம். இதற்கும் மேலே நான் காட்டியதே காரணமாகும்.

57. சி.—கட்டடங்களுக்குத் தாங்கள் சொல்லுகிறபடி உலோகங்களினாற் செய்யப்பட்டகம்பிகளை அமைத்துவைப்போமானால்மின்சாரத்தை இழுத்துக்கொள்ளும் சக்தி அக்கம்பிகளுக்குண்டாகுமோ?

ஆ.—தண்ணீர்க்குழாய்களுக்குத் தண்ணீரை இழுக்கும் சக்தி எப்படி கிடையாதோ அதுபோலவே அக்கம்பிகளுக்கு மின்சாரத்தை இழுக்கும் சக்தி கிடையாது. தண்ணீர் ஓடுவதற்குக் குழாய்கள் எப்படி வழிகளாயிருக்கின்றனவோ அப்படியே அக்கம்பிகள் மின்சா

ரப்போக்குக்கு மார்க்கங்களாயிருக்கின்றன. இவ்வாறு அமைக்கும் கம்பிகளை நிலத்திற்குக் கீழே நெடுந்தூரத்திலாவது சமீபத்திலுள்ள ஏதேனும் நீர்நிலைகளிலாவது கொண்டுபோய்விடுவது மிகவும் நல்லது.

58. கே.—சாதாரணமாய்ப் பட்டணங்களிலே இடி என் விழுவதில்லை?

ஆ.—ஏனெனில், பட்டணங்களிலே ஒவ்வொரு வீட்டிலும் சமையல் அறை முதலிய இடங்களுக்கு மேலாக உயரமாய்ப் பலவகையான புகைக்கூடுகளும் உலோகங்களினால் செய்யப்பட்ட பலவகையானசாமான்களும்நிறைந்திருக்கிறபடியினாலே அவைகளெல்லாம்ஒரு விதத்தில் மின்சாரப்போக்குக்கு அநுகூலமான பொருள்களானபடியால் மின்சாரம் யாதொரு ஆபத்தையும் விளைக்காமல் அவைகளின் மூலமாக ஒருவருக்கும் தெரியாமலே நாற்புறமும் போய்விடுகின்றது. பெரும்பாலும் மரங்களின்மேலும் காடுகளிலுந்தான் இடிவிழுவதுண்டு. (இன்னும்வரும்.)

## ஓர்கரடியின்கதை.

### 22-ம். அத்தியாயம்.

### தோட்டம்.

இப்பொழுது விக்கிரமவீரன் தான் விடப்பட்டிருக்குமிடம் மிருகங்கள் அடைக்கப்படும் வண்டியாயிருக்குமாவென்று முதலில் சந்தேகித்து உடனே அது அப்படிப்பட்டதாயிராதென்று நிச்சயித்துக்கொண்டது. ஏனெனில், ஜாம்பவனென்னும் கிழக்கரடி அடைபட்டிருந்தவண்டி சூரியனாவது நீலமயமான ஆகாயமாவது ஒருபோதும் கண்ணுக்குப் புலப்படாதபடி நாற்புறமும் மரப்பலகைகளினால் அடைக்கப்பட்டிருந்ததென்று தன் தாயாகிய உத்தமஜீவி தனக்குச் சொல்லியிருந்த விஷயம் விக்கிரமவீரனுக்கு ஞாபகமிருக்கிறது. மேலும் அது மிருகங்களடைபட்டிருந்த வண்டிகளைச் சந்தையில் தானே பார்த்தும், இவ்வளவுநெருக்கமான இடத்தில் எக்காலத்தும் அடைபட்டிருப்பதெப்படி யென்னும் எண்ணத்தினால் முன்னமே கர்ப்பங்கலங்கியுமிருக்கிறது.

இப்போது விக்கிரமவீரனிருக்குமிடமோ அப்படிப்பட்டவண்டியைப் போன்றதல்ல. அதற்கென்று விடப்பட்டிருந்த அறையின் உட்புறத்தில் கெட்டியான கற்சுவர்களும், குளிர்ச்சியானதரையுமிருந்தபடியால் அது ஒரு குகையைப்போலவேயிருந்தது. அது எப்படி யிருந்ததென்பதை வைத்துக்கொள்வோம். விக்கிரமவீரனுக்கு அந்த இடம் மிகவும் சவுக்கியமாயிருந்தபடியால், என் அதிர்ஷ்டமே அதிர்ஷ்டமென்று அது குதூகலங்கொண்டு நாற்புறமும் சுற்றிச் சுற்றி யோடிச் சமீபத்திலிருந்த பெரிய குளத்தில் மூழ்கி எழுந்தது.

இந்த இடம் மிருகங்களடைக்கப்படும் வண்டியைப்பார்க்கினும் எத்தனையோமடங்கு விசேஷமானதுதான். அவ்விடத்து வேலையாள் அதை விட்டுப் போனபிறகு விக்கிரமவீரன் பக்கத்திலிருந்த இருப்புக்கம்பிகளின்மேல் உட்கார்ந்து நெடுநேரம்வரையில் மற்ற மிருகங்களைப் பார்த்துக்கொண்டிருந்தது.

அவைகளுக்குள்ளே பெரும்பான்மை அதற்கு முன் பின் தெரியாத நூதனமானவைகளாயிருந்தன ; ஆயினும் சிறிதுதூரத்தில் ஒருகரடியிருப்பதாக அதற்குத் தோன்றியது. வேறொருபக்கமாகப் பார்க்க அது திரும்பியபோது துருவப்பிரதேசக்கரடியே அங்கிருப்பதாகத் தெரியவந்தது. அது விடப்பட்ட இடம் விக்கிரமவீரனுடைய இடத்தைப்போலவே விசாலமானதுதான். ஆனால் தரை முழுவதும் குளமாயிருந்தது. கம்பிகளுக்குச் சமீபமாய் ஓரத்தில் மாத்திரம் நெருக்கமான சிறுபாதையொன்றிருந்தது.

விக்கிரமவீரன் நெடுநாளாய்ப் பார்க்கவேண்டுமென்று விருப்பங்கொண்டிருந்த அத்துருவப்பிரதேசக் கரடிக்குக் கழுத்து நீண்டும், கண்களும்மூக்குங் கறுத்தும், மயிர்வெளுத்து மிருந்தன. அதன் செய்கைகளை விக்கிரமவீரன் அதிக சிரத்தையாய்க் கவனித்துக்கொண்டிருக்கையில் அது சமீபத்திலிருந்த குளத்தில் மூழ்கி உள்ளேபோய் நீந்தியது. அதைப் பார்த்துக்கொண்டிருந்த விக்கிரமவீரன் அக்குளத்தில் ஏதாவது மீன் முதலிய பிராணிகளிருக்குமோவென்று வியப்புடன் நினைத்துக்கொண்டிருந்தது. பனிக்கட்டிகளால் மூடப்பட்டிருக்கும் பிரதேசங்களிலே வசித்துக்கொண்டிருந்த அவ்வெண்கரடிக்கு இந்த இடம் மிகவும் வெப்பமாயிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

ஆகையால் அவ்வெண்கரடி சற்றேறக்குறைய எப்போதும் ஜலத்திலேயேயிருந்து காலங்கழிப்பது ஒருவியப்பன்று. மழைக்காலத்தில் அக்கரடியின் சிநேகத்தை நாடுவது உத்தமமென்று விக்கிரமவீரன் தீர்மானித்துக்கொண்டது. ஏனெனில், அதன்குளத்துத் தண்ணீர் அக்காலத்தில் இறுகி நாற்புறமும் பனிக்கட்டி நிறைந்திருக்குமாகையால் அப்போது அது தான் பிறந்த இடத்திலிருப்பதுபோல் விளையாடிக்கொண்டு சந்தோஷமாயிருக்கும். மற்றக்கரடிகள், சிங்கங்கள், புலிகள் ஆகிய இவைகளோ உடனே சிநேகமாய்விடும். விக்கிரமவீரன் முன்னேவசித்துக்கொண்டிருந்த இமயமலைகளைப்பற்றியும் அங்குள்ள தேவதாருவிருட்சக் காடுகளைப்பற்றியும் கேட்க அம்மிருகங்களுக்கு விருப்பமிருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை.

விக்கிரமவீரன் உட்கார்ந்துகொண்டு அங்கிருந்த பிராணிகளையெல்லாம் பார்த்துச் சலித்தபின் தன்னுடைய விடுதியைச்சுற்றிலும் மறுபடியும் ஒருதடவை உலாவிவந்தபோது, அங்கு இடையிலிருந்த கம்பத்திற்குப் பக்கங்களில் கிளைகளிருந்தபடியால் அது ஒருவித மரமென்றும், அதன்மேலேறி உட்காருவதற்கு அநுகூலிக்காத அவ்வளவு குட்டையாய் அது வெட்டப்பட்டிருக்கிறதென்றும் அதற்குத் தெரியவந்தது. இதற்குமுன்னே அது இன்னதென்று அதற்குத் தெரியாது. ஆயினும் அதன்மேலேறி உட்காருவதற்கு அது கூடியவரையில் உயர்ந்துதானிருக்கிறதென்று விக்கிரமவீரன் நினைத்து உடனே அதன்மீதேறி முனையில் உட்கார்ந்துகொண்டது. அது ஏறி உட்காருவதற்காகவென்றே அவ்விடத்தில் ஒரு பெருங்கிளையிருந்தது. இவ்வாறு விக்கிரமவீரன் அதன்மேல் உட்கார்ந்துகொண்டு நாற்புறமும் சுற்றிப்பார்க்கையில் தானிருந்த இடம் இன்ன ஸ்தானத்திலிருந்ததென்று அதற்கு நன்றாய்ப் புலப்பட்டது.

தானிருந்த இடம் சந்தையல்லவென்றும், தும்பும் தூசும் படிந்தபாதையல்லவென்றும், தான் அதுவரையில் கண்டிராத அதி அழகான தோட்டமென்றும் விக்கிரமவீரன் அறிந்துகொண்டது. அத்தோட்டத்தில் அனேகமரங்களும் செடிகளும் புல் அடர்ந்த மைதானங்களும் துருக்கல்லால் ஏற்படுத்தப்பட்ட திவ்வியமான பாதைகளும் ரமணீகரமான மலர்களையும் இலைகளையுமுடைய புஷ்பச்செடிப்பாத்திகளும் விக்கிரமவீரன் கண்ணுக்குத் தோன்றின. அ

து அந்த கம்பத்தின் முனையிலுட்கார்ந்துகொண்டு நாற்புறமும்தோன்றிய சகலபொருள்களையும் பார்த்து வியந்துகொண்டேயிருந்தால் போதுமென்று நினைத்தது. அந்தத்தோட்டத்தில் பார்க்கத்தக்க பொருள்கள் அனேகமிருந்தன. செடியில் பிரகாசமாய் மலர்கள் புஷ்பித்திருந்ததை விக்கிரமவீரன்பார்த்து நெடுங்காலமாயிற்று. ஏனெனில், நாட்டுப்புறத்துப் பாதைகளின் வழியாகச் சேடனோடு அது போய்க்கொண்டிருந்தபோது பாதைகளின் இருபுறத்திலிருந்த வேலிகளிலே சில சமயங்களில் புஷ்பங்களிருந்தபோதினும் அவைகள் சூரியவெப்பத்தினால் ஒளிமழுங்கிப் பாதையின்மண் பட்டிருந்தன.

சந்தையிலுங்கூட ஜனங்கள் விற்பதற்காகப் பூச்செண்டுகளைக் கூடையில் வைத்துக்கொண்டு வந்தார்களேனும், பறிக்கப்பட்ட புஷ்பங்கள் விஷயத்தில் விக்கிரமவீரனுக்கு விருப்பமில்லை. ஏனெனில், அப்புஷ்பங்கள் தலையிறக்கத்துடன் ஒளிமழுங்கியிருந்தபடியால் அவைகள் தம்முடைய வாசஸ்தலங்களாகிய விருட்சங்களையும் தம்மோடுகூட இருந்த மற்ற மலர்களாகிய நண்பர்களையும் விட்டுப் பிரிந்தகாரணத்தினாலே துக்கமிகுதியால் வருந்துவது போல் தோன்றின.

இந்தத் தோட்டத்திலோ ஒவ்வொரு புஷ்பமும் செடியில் ரமணீகரமாகவும் அழகாகவும் விளங்கிக்கொண்டிருந்தது. அப்புஷ்பங்களின்மேல் சூரியன் பிரகாசித்தபடியால் அதற்கு முந்திய நாளிற் பெய்த மழைக்குப் பிறகு சூரியன் தமக்குத் தந்த காந்திக்காகவும் உஷ்ணத்திற்காகவும் நன்றியறிதலாக மேல்நோக்கிச் சூரியனுக்கு வந்தனஞ்செய்வதுபோல் அவைகள் மேலே நிமிர்ந்து விளங்கின.

அத்தோட்டத்திலிருந்த பாதைகளைச்சுத்திசெய்துகொண்டும் புல்லைவெட்டிக்கொண்டும் புஷ்பப்பாத்திகளில் களைபறித்துக்கொண்டும் தோட்டக்காரர்களிருந்தார்கள். சிலர் அதற்குமுன்னமே அத்தோட்டத்தில் நெடுந்தூரத்திலிருந்த சில கூடுகளைப் பார்த்துக்கொண்டே நடந்துவந்தார்கள். அக்கூடு நெடுந்தூரத்திலிருந்தபடியால் அவைகளிலிருந்த பிராணிகள் இன்னவையென்று விக்கிரமவீரனுக்குத் தெரிந்துகொள்ளக் கூடாமையாயிருந்ததேனும், அங்கிருந்து கேட்ட சப்தங்களினாலே அப்படிப்பட்ட பெரிய கூடுகளிலேயிருக்கும் பிராணிகள் பெரும்பாலும் கழுகுகளாயிருக்கவேண்டுமென்று உத்தேசித்தது.

இப்படியிருக்கையில் அங்கிருந்த ஓர்பாதை வாயிலாக ஒரு ஸ்திரீ விக்கிரமவீரனிருந்த பள்ளத்தாக்கண்டைவந்து நின்றாள். அவளுடைய கையில் ஒரு சிறு குழந்தை இருந்தது. இன்னும் சில குழந்தைகள் அவள் பக்கத்தில் நடந்துவந்தன.

அக்குழந்தைகள் விக்கிரமவீரன் கம்பத்தின்மேல் உட்கார்ந்துகொண்டிருப்பதைப் பார்க்கப் பயப்படுவதுபோல் தோன்றியபோது, அந்த ஸ்திரீ பயப்படவேண்டாமென்று அவர்களைத் தைரியப்படுத்தி ஒவ்வொரு குழந்தையாகத் தூக்கிக் கரடியைப்பார்க்கும்படி காட்டினாள். அக்குழந்தைகள் கூச்சங்கொண்டபடியால் அவள் எடுத்து அந்தப்படி காட்டிக்கொண்டிருந்தபோதெல்லாம் அவளைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருந்தன. கூடியவரையில் சாந்தமாயிருக்க விக்கிரமவீரன் முயன்று அவர்களுக்கு வேடிக்கை காட்டும்பொருட்டு அக்கம்பத்தின்மேல் சுற்றிச் சுற்றிவந்து பின்னங்காலைப் பரப்பி உட்கார்ந்துகொண்டிருந்தபோதினும், அது ஒன்றுஞ் செய்யாமல் சும்மா இருந்தபோது அவ்வளவாகப் பயப்படாமல் அது நாற்புறமும் அசையும்போது அக்குழந்தைகள் அதிகமாகப் பயப்படுவதாய் அதற்குத் தெரியவந்தது. அக்

குழந்தைகள் பருத்துச் சிவந்த இரண்டு அத்திக்கனிகளை அதன் குழியிற் போட்டுவிட்டு உடனே போய்விட்டன.

இவ்வாறு குழந்தைகள் தன்னைவந்து பார்த்ததைப்பற்றி விக்கிரமவீரனுக்கிருந்த சந்தோஷத்தை இவ்வளவவ்வளவென்று சொல்லமுடியாது. ஏனெனில், அக்குழந்தைகள் தனக்காகப்போட்ட அத்திப்பழங்களை உடனே இறங்கித் தின்னுவதற்கும் போகாமல் அது அக்குழந்தைகளைத் தன் கண்ணுக்கெட்டுகிறவரையிற் பார்த்துக்குதித்துக்கொண்டும் கூத்தாடிக்கொண்டுமேயிருந்தது.

பிறகு அது கம்பத்தைவிட்டுக் கீழிறங்கி அக்கனிகளைத்தின்றது. அப்போது அதற்கு நல்லபசி. அவ்வளவு நன்றாய் நெடுநாளாகப்பசியெடுக்கவில்லை.

இந்த சொகுசான இடத்தில் அதி சவுக்கியமாயிருக்கலாமென்று விக்கிரமவீரன் நினைத்தது. நிமிஷத்திற்கு நிமிஷம் அனேகர் அக்குழியண்டைவந்து கீழிருந்த புது கரடியாகிய விக்கிரமவீரனைப் பார்த்துக்கொண்டிருந்தபடியால் தன்னை இன்னும் அனேகர் வந்துபார்ப்பார்களென்று அது அபிப்பிராயப்பட்டது.

தன்னை ஒருதடவை பார்த்தபிறகு ஜனங்கள் சிங்கங்களையும் புலிகளையும் போய்ப்பார்த்துவிட்டுத் தன்னை மறுபடியும் பார்த்துவியக்க இருப்புக்கம்பிகளண்டைவந்து நின்றார்கள், அவர்களுக்குள் அனேகர் ரொட்டி முதலிய பலகாரங்களையும் நானாவித கனிகளையும் தனக்குப் போட்டார்கள்.

இவ்வாறு தனக்குக்கிடைத்த திவ்வியமான ஆகாரவகைகளுக்காக விக்கிரமவீரன் நன்றியறிதலாய்ப் பின்னங்காலால் கம்பத்தின் மேலுங் கீழுமாக ஓடுவதோடுங்கூட, நீளமான ஓர் தடியின்முனையில் ஏதேனும் ஒரு பொருளை வைத்து எவரேனுங் கொடுத்தால் அதைப்பிடிக்கவும் முயலும்; தூரத்திலிருந்து எறியும் வஸ்துக்களை வாயினாலேயே பிடித்துக்கொள்வதில் அது மிகவும் சாமர்த்தியமடைந்தது.

யாராவது தன்னைப்பார்க்கத் தன் குழியண்டைவரும்போதெல்லாம் விக்கிரமவீரன் தன் பின்னங்கால்களைக் கைகளாற்பற்றி, தலையைச் சிறிது ஒருபுறமாகச் சாய்த்து, காதுகளைப் பின்புறமாக நெளித்து, வாயைப் பரக்கத்திறந்து, தன் பெரும் நாக்கையும் நீண்டு கூர்மையாயிருக்கிற நான்கு பற்களையும் காட்டிக்கொண்டிருக்கும். ஏதேனும் பலகாரம் வேண்டுமென்று இரந்து கேட்பதற்கு இது ஒரு நல்ல அறிகுறியாதலால், இக்கரடி இந்தப்படி செய்துவந்தது. பலகாரம் தேடுவதற்கு இது ஒரு சாமர்த்தியமான மார்க்கமென்று தெரிந்துகொண்ட யார்தான் இப்படிசெய்யப் பின்னிடுவார்?

## அவரவருரிமை அவரவரடைவர்.

(தொடர்ச்சி.)

விசித்திரவிஜயனிடத்தில் அதிக விசுவாசம்கொண்டிருப்பவளைப்போல் நடித்த பெருந்தேவி அவனிடத்துள்ள அந்நான்கு அரிய பொருள்களையுங் கவர்ந்துஅவனை வஞ்சிக்கவேண்டுமென்று சமயம்பார்த்துக்கொண்டேயிருந்து ஒருநாள் விசித்திரவிஜயன் சந்தோஷமாயிருக்குஞ்சமயத்தில், ஓ துணையே! உன் உயிராகிய மோகனாங்கிகுழந்தையாயிருந்தபோது அவளுக்கு ஒரு கொடுஞ்சுரநோய் கண்டு இனி அவள் பிழைப்பது அரிதென்று பண்டிதர்கள் கைவிட்டகாலத்தில் நானொரு

காளிக்குப் பிரார்த்தனை செய்துகொண்டேன், அக்காளியின்கோயில் சமுத்திரத்திலே ஒருதீவிலிருக்கிறது, அவ்விடத்திற்கு மரக்கலங்கள் கூட இப்போது போவது துர்லபமாம், அத்தீவண்டை எப்படியாவது எங்களை நீ அழைத்துக்கொண்டு போவாயாகில் என்பிரார்த்தனையை நிறைவேற்றிவிடுவேன், அது நிர்மானுஷ்யமான தீவாகையால் அவ்விடத்திற்கு உன்னையன்றி எங்களை அழைத்துக் கொண்டுபோவார் ஒருவரும் இலர் என்றாள். அவளுடைய சொல்லை நம்பிய விசித்திரவிஜயன் அவ்வாறே செய்வேனென்றெழுந்து சந்தனப்பாதக் குறடுகளை யெடுத்துக் கீழேவைத்து அதன்மேல் தான்நின்று மற்றப் பாத்திரம், பை, மந்திரவாள்ஆகிய இவற்றை இடுப்பிலிழுத்துக் கட்டிக்கொண்டு, மோகனாங்கியையும் பெருந்தேவியையும் பார்த்து, என்னிரண்டு கைகளையும் நீங்கள் கெட்டியாகப் பற்றிக்கொள்ளுங்களென்று சொல்ல, அவர்களிருவரும் அவ்வாறே செய்தார்கள். விசித்திரவிஜயன் பெருந்தேவி தனக்குக் குறிகாட்டிய தீவுக்குப்போகும்படி நினைத்தமாத்திரத்தில் அச்சந்தனப்பாதக்குறடுகள்அம்மூவரையும் கொண்டுபோய் அத்தீவில் விட்டன. அத்தீவில் மனுஷ்யசஞ்சாரமே கிடையாது. காளிக்குப் பொங்கலிடுவதுபோல் பெருந்தேவியும் மோகனாங்கியும் நடித்துக்கொண்டிருக்கையில் விசித்திரவிஜயன் தன்னிடத்திருந்த நான்குபதார்த்தங்களையும் அவர்களிடத்தில் ஒப்பித்துப் பத்திரமாய் வைத்திருக்கச்சொல்லி மலோபாதையை ஒழித்துக்கொள்ளலாமென்றும், அவ்விந்தையானதீவைச் சுற்றிப்பார்க்கலாமென்றும் உத்தேசித்துப் போனான். அச்சமயம் பார்த்துப் பெருந்தேவியும் மோகனாங்கியும் அந்தப்பை, பாத்திரம், மந்திரவாள் ஆகிய இவற்றை அதிவிரைவாக எடுத்துக்கொண்டு சந்தனப்பாதக்குறடின்மேல்நின்று தம் வீட்டுக்குப் போகவேண்டுமென்று விரும்ப அவ்விருவரும் தம் வீடு வந்துசேர்ந்தார்கள். இவர்கள்போய் இறங்கிய இடத்திற்கு உடனேவந்துபார்த்த விசித்திரவிஜயன்இவ்விருவரும் தன்னை வஞ்சித்துத் தனியே விட்டுப் போய்விட்டார்களென்பதை நன்றாயறிந்து,

"அத்திமலரு மருங்காக்கைவெண்ணிறமுங்
கத்துபுனன்மீன்பதமுங் கண்டாலும்—பித்தரே
கானார்தெரியற் கடவுளருங் காண்பரோ
மானார் விழியார் மனம்."

என்னுஞ் செய்யுளின்கருத்தை நன்குணர்ந்தேன்;

"தன்னாயுதமுந்தன்கையிற்பொருளும்
பிறர்கையிற்கொடுக்கும்பேதையும்பதரே."

என்னும் மேலோர்வாக்கியம் என்பாற்பலித்தது, ஆயினும் ஆகுக, அவ்வரிய பொருள்களுக்கு நானே உரியவனாயிருக்கின் எனக்கே அவைகள் கிடைக்கும், அப்படிக்கன்றி அந்த ஸ்திரீகளே அவைகளுக்குரியவராயின் அவர்களே அவைகளைப்பெறுவாரென்று மனந்தேறிப் பசியோடு ஒன்றுஞ்செய்ய வகையறியாது தியங்கிக்கொண்டிருந்தான்.

இவ்வாறு தியங்கிக்கொண்டிருந்த விசித்திரவிஜயன் பசியினால் மிகவும் மெலிந்து, அத்தீவின் ஒருபுறத்திலே தனியே நான்கு கிளைகளோடு உன்னதமாய் வளர்ந்திருந்த ஒரு மாவிருட்சத்தின் மீதேறி அதன் கிளையொன்றிற்பழுத்திருந்த ஓர் கனியைத்தின்றான். உடனே அவன் கருங்குரங்காய்விட்டான். அதுகண்டு அவன் மிகவும் வியப்படைந்து நம்முடைய கதி இப்படியாயிற்றே? ஆயினுமாகுக என்று மனந்தேறி வேறொரு கிளையின்மேல் தாவிக்குதித்து அதிலிருந்த கனியொன்றைப் புசித்தான். உடனே அவன் ஒரு பருந்தினுருவம் பெற்றான். அதுகண்டு இவ்விருட்சத்தின் குணகுணங்களை இன்னும் நன்றாய்ப் பரிசோதிக்கலாமென்று நினைத்து அதன் மூன்றாவது கிளைக்குத்தாவி அதிலிருந்த கனியொன்றைப் புசித்தான். அது அவனை உடனே ஒரு கிழவியாக்கிவிட்டது. அதைப்பார்த்துப் பெருநகைப்புடன் எஞ்சிநின்ற நான்காவது கிளைக்குப்போய், இதன் கனி நமக்கு இன்னும் எந்த உருவத்தைத்தருமோ பார்க்கலாமென்று நினைத்து அதன்கனியொன்றைச் சுவைத்தான். உடனே அது அவனைப் பேரழகுவாய்ந்த அரசிளங்குமாரனாகிய இயற்கை உருவத்தைத்தந்துவிட்டது. இவ்வற்புதங்களைக் கண்ட விசித்திரவிஜயன் ஆனந்த பரவசனாகிப் பகவானைப் பலமுறையும் நமஸ்கரித்தெழுந்து, அவ்விருட்சத்தின் ஒவ்வொரு கிளையினுமிருந்த கனிகள் சிலவற்றையறுத்து அவற்றிற்குக் குறிப்பிட்டு ஒரு மூட்டையாகக்கட்டிக்கொண்டான். பிறகு பருந்தினுருவத்தைக் கொடுக்கத்தக்க கனியைத்தின்ற மாத்திரத்தில் விசித்திரவிஜயன் பருந்தினுருவம்பெற்று அக்கனிகளையெல்லாம் ஒரு மூட்டையாகத் தன் காலிற் கட்டிக்கொண்டு அத்தீவைவிட்டு மேலெழும்பிப் பறந்து சமுத்திரங்களைக் கடந்து மோகனாங்கியின் வீட்டுக்குட்பிரவேசித்தான். உடனே தனக்குஇராஜகுமார வடிவம் தரத்தக்க கனியைத் தின்று தன் இயற்கை யுருவைப்பெற்று ஒருவருக்கும் தெரியாமல் அம்மாளிகையிலிருந்த தூங்குமஞ்சத்தில் சயனித்துக் கொண்டிருந்தான்.

சிறிதுநேரம் பொறுத்து மோகனாங்கியும் பெருந்தேவியும் சயனிப்பதற்காக அவ்வறைக்குட் பிரவேசித்த மாத்திரத்தில் திடுக்கிட்டு, நாமிப்போது காண்பது கனவோ நனவோ என்றையமுற்று, உடனே இது கனவன்று நனவுதானென்று தேறி, இஃதென்ன ஆச்சரியம்! அத்தீவைவிட்டு இவன் எவ்வாறு வந்திருக்கலாமென்று யோசித்தும் காரணம் தெரியாமல் தியங்கிக்கொண்டும், இவனை எப்படியாவது கொன்றுவிடுவதே உத்தமமென்று ஆலோசித்துக் கொண்டுமிருந்தார்கள். விசித்திரவிஜயன் அந்த ஸ்திரீகளுக்கு யாதொருதீங்கும் செய்யாதிருக்கவும், அவனுக்குத்தாங்கள் விளைத்ததீங்குகளுக்காக அந்தஸ்திரீகள் அவனுக்குப் பயந்து அவனைக்கொல்லவும் நினைத்தார்களல்லவா? ஆயினும் சர்வாந்தரியாமியாயுள்ள கடவுள் அவரவருரிமையை அவரவர்க்குவழங்கச் சர்வசித்தமாயிருக்கிறாரல்லவோ?

சயனித்துக்கொண்டிருந்த விசித்திரவிஜயன் எழுந்தமாத்திரத்தில் அவனை மோகனாங்கியும் பெருந்தேவியும் கண்டு ஆலிங்கனஞ்செய்து பரிவு பாராட்டுபவர்களைப்போல் நடித்து, துரையே! அத்தீவில் எங்களை விட்டு நீ அகன்றவுடனே பெரும்புலியொன்று எங்களைக் கொல்ல வந்ததைக் கண்டமாத்திரத்தில் நாங்கள் உன்னுடைய சந்தனக்குறடுகளின் மகிமையால் அங்கிருந்து தப்பித்துக்கொண்டு வந்துவிட்டோம், ஆயினும் உன்னையே அதுமுதல் நினைத்துக்கொண்டு அன்னமாகாரமின்றி வருந்துகிறோம், தெய்வ கடாட்சத்தினால் நீ இப்போது இவ்விடத்தில் வந்து சேர்ந்ததனாலே எங்கள் மனதிலுண்டாயிருக்கும் பெருமகிழ்ச்சி இவ்வளவினதென்பதைச் சொல்ல எங்களுக்கு ஆற்றல் போதாதென்று பொய்யுரை யாடினார்கள். அவர்களுடைய உட்கருத்தை யறிந்துகொண்ட விசித்திரவிஜயன், பெண்மணிகளே! ஒவ்வொருவரும் ஆபத்துவேளைகளில் தம்முடைய இன்னுயிரைப் பாதுகாத்துக்கொள்வது பரமதர்மமேயாதலின் நீங்கள் செய்தகாரியம் நன்றே, நான் அத்தீவிலிருந்த ஒரு மாவிருட்சக்கனிகளின் மகத்துவத்தினாலே தெய்வகடாட்சம் முன்னிற்க இங்குவந்து சேர்ந்தேனென்றான். அதுகேட்டு அம்மாதர்கள் அப்படிப்பட்ட அற்புதமான பழங்களிற் சிலவற்றை எங்களுக்குத் தரவேண்டுமென்றுகேட்க, ஆதியோடந்தமாய் அவர்களுக்கிருந்த பேராசைக்காக அவர்களைத் தண்டிக்கஎண்ணி விசித்திரவிஜயன்-தான் முன்னமே குறிப்பிட்டிருந்த கனிகளுக்குள் இரண்டையெடுத்து ஒன்றை மோகனாங்கிக்கும் மற்றொன்றைப் பெருந்தேவிக்கும் தந்தான். அக்கனிகளை ஆவலுடனே அவர்கள் தின்றமாத்திரத்தில் மோகனாங்கி கருங்குரங்கானாள்; பெருந்தேவி பருந்தானாள்.

உடனே விசித்திரவிஜயன் அவ்வீடு முழுவதையும் நன்றாய்ச் சோதித்துத் தன் அரிய பொருள்களாகிய சந்தனப்பாதக்குறடு-பை-பாத்திரம்-மந்திரவாள் என்னும் இவற்றைத்தேடி ஒருபிச்சைக்காரனைப்போல் மாறுவேஷம்பூண்டு மோகனாங்கியாகிய கருங்குரங்கையும் பெருந்தேவியாகிய பருந்தையும் கையிற்பற்றிப் பலவகையான விளையாடல் காட்டிக்கொண்டே ஊரூராய்த்திரிந்து அனேக காடுகளைக்கடந்து கடைசியாய் ஒருபட்டணத்திற் சேர்ந்தான். அவ்வூரரசன் சிலவருடங்களுக்குமுன்னே பட்டத்து யானையால் காட்டிலிருந்துகொண்டுவந்து பட்டாபிஷேகம்செய்யப்பெற்றவனென்று கேள்வியுற்று, விசித்திரவிஜயன் தன் தமையனாகத் தான் அவ்வரசனிருக்க வேண்டுமென்று நிச்சயித்துத் தன்னை அவனுக்கறிவித்துக்கொள்ள எண்ணி அங்கிருந்த கடைவீதியிற் பிரவேசித்து, தன் வேடிக்கையைப் பார்க்கும் ஒவ்வொரு கடைக்காரனும் ஐந்துவராகன் கொடுக்கவேண்டுமென்று நிர்ப்பந்தித்து ஒவ்வொருகடையண்டையும் போராடிக்கொண்டிருந்தான். இந்த ஆரவாரத்தைப் பொறுக்க முடியாதவர்களாகி அந்தக் கடைக்காரர்கள் அந்நகர் விசாரணை உத்தியோகஸ்தரிடத்தில் முறையிட்டுக்கொள்ள அவர்கள் வந்து அவனைக்கண்டித்தும் அவன் கேளாமல் பிடிவாதம் செய்து

கொண்டிருந்தானுகையால், அவர்கள் போய் அவ்வூர் அரசனாகிய கஜபதியினிடத்து அச்சங்கதியைத் தெரிவிக்க, அவனே நேரில்வந்து விசித்திரவிஜயனைக்கண்டான். அவ்விருவரும் ஒருவரையொருவர் கண்டமாத்திரத்தில் அகத்திற்பெருமகிழ்ச்சிகொண்டார்கள். ஆயினும் சாமானிய ஜனங்களுக்கு மத்தியில் விசித்திரவிஜயனை ஆலிங்கனஞ்செய்து தன்மாளிகைக்கழைத்துக்கொண்டுபோக கஜபதிக்குவிருப்பமிராதிருந்தபடியால் அவனைத் தான் முன் பின் பாராதவனைப்போல் நடித்து, அப்பிச்சைக்காரன் காட்டும் வேடிக்கை அதியற்புதமானதால் ஒவ்வொருகடைக்காரனும் அவன் கேட்டபடியே தொகை செலுத்தவேண்டுமென்று கட்டளையிட்டுத் தன் மாளிகைக்குத் திரும்பினான்.

அரண்மனைக்குச் சென்ற கஜபதி அப்பிச்சைக்காரனைத் தன் வீட்டுக்குத் தனியே அழைத்துவரும்படி தன்னுடைய மந்திரிக்குக் கட்டளையிட, அவன் வந்து அவ்வாறே அவனை அழைத்துக்கொண்டு போய் அரண்மனையிற் சேர்த்தான். அப்போது அவ்விரண்டு சகோதரர்களும் ஒருவரை யொருவர் ஆலிங்கனஞ்செய்துகொண்டு சந்தோஷங்கொண்டாடினார்கள். விசித்திரவிஜயன் தனக்கு ஆதியோடந்தமாக விளைந்த ஆபத்துக்களையும், அவைகளினின்றும் தான் தப்பிப்பிழைத்த விதங்களையும், தனக்குக்கிடைத்த அருமையான பொருள்களின் விசித்திரங்களையும் தன் தமையனிடத்திற்கூறினான். அவற்றையெல்லாங் கேட்ட கஜபதி தன்னுடைய மந்திரிகள், உத்தியோகஸ்தர்கள், ஊர்க்குடிகள் முதலிய யாவரையும் ஒருநாள் ஒருங்குசேர்த்து அவரவர்களுக்குத் தக்கபடி விருந்தளித்தும் மரியாதை செய்துமானபிறகு, தன்னுடைய பூர்வவிர்த்தாந்தத்தையும் தான் விசித்திரவிஜயனைப் பிரிந்தநாள்தொடங்கி அவனுடைய விர்த்தாந்தத்தையும் யாவரும் கேட்டு வியந்தானந்திக்கும்படி கூறினான். அப்போது கஜபதி கட்டளையிட்டவாறே மோகனாங்கியாகிய கருங்குரங்குக்கும் பெருந்தேவியாகிய பருந்துக்கும் அம்மாவிருட்சத்தின் நான்காவது கிளையினின்றும் தான் பறித்த கனிகளை விசித்திரவிஜயன் கொடுக்க அவர்கள் அங்கிருந்த யாவருங்கண்டு வியக்குமாறு தத்தம் இயற்கையுருவைப் பெற்றார்கள். அவ்விருவரும் ஆதியோடந்தமாக விசித்திரவிஜயனிடத்துக் கொண்டிருந்த துரோகசிந்தைக்காக கஜபதி அவர்களை நன்றாய்த்தண்டிப்பித்து,

"அங்கண்விசும்பினமரர்தொழப்படுஞ்
செங்கண்மாலாயினுமாகமற்—றங்கைக்
கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளிரன்னார்
விடுப்பர்தங்கையாற்றொழுது."

என்பதுபோன்ற மேலோருடைய வாக்கியங்களுக்கு அவர்களை உதாரணமாகத் தன்குடி ஜனங்களுக்குக் காட்டி, பரத்தையரைநம்பி எவரும் மதிமோசம்போகலாகாதென்று யாவருக்கும் புத்திமதிகள்கூறி, ஒருவயித்தியனைக்கொண்டு மோகனாங்கி வயிற்றிலிருந்த கொட்டை

யை எடுப்பித்து அவளையும் பெருந்தேவியையும் தம்முடைய ஊருக்குப் போம்படி துரத்திவிட்டான்.

சிலநாள்பொறுத்து அவ்விரண்டு சகோதரர்களும், வறியவர்களாய்த் தம்மை நெடுங்காலம் பிரிந்திருக்கும் சந்திரசேகரனென்னும் பிதாவையும் அமிர்தவல்லியென்னும் மாதாவையும் காண எண்ணங்கொண்டு பிருந்தாநகரத்திற்குப்போக வழிதெரியாதவர்களாய் மயங்கிக்கொண்டிருக்கையில் விசித்திரவிஜயன் கொண்டுவந்த சந்தனப்பாதக்குறடுகளின் ஞாபகம் அவர்களுக்கு வர, அவைகளின் உதவியால் பிருந்தாநகரத்திற்குச்சென்று தாய் தந்தையரைக்கண்டு தங்களுடைய விர்த்தாந்தங்களையெல்லாம் ஆதியோடந்தமாய்க்கூறினார்கள். அம்முதியோர் தம் இரண்டுபுத்திர ரத்தினங்களையும் கண்டமாத்திரத்தில் ஆதவனைக்கண்ட அம்புயத்தைப்போல் முகமலர்ந்துபேரானந்தமடைந்தார்கள். உடனே விசித்திரவிஜயன் தன் கையிலிருந்த மந்திரவாளைக்கொண்டு அப்பிருந்தாநகரத்து நூதன அரசனைமாள்வித்து அந்நகரை முன்போல் தன் பிதாவுக்குக் கொடுத்தான். சந்திரசேகரன் என்னும் பிதா மிகவும் வயோதிகனாய் விட்டபடியால் அந்நகரத்து இராஜ்ஜியபாரத்தை விசித்திரவிஜயனே வகித்துக்கொண்டு அரசாண்டுவந்தான். கஜபதி தன்னுடைய வீரகண்டாமணி நகரத்திற்குச்சென்று இராஜ்ஜிய பாரம் செய்துவந்தான். அவர்களுடைய மாதா பிதாக்கள் சிறிதுகாலம் கஜபதியினிடத்தும் சிறிதுகாலம் விசித்திரவிஜயனிடத்தும் காலங் கழித்துவந்தார்கள்.

இவ்விசித்திரமான விர்த்தாந்தத்தினால், அவரவர்க்குரிய பொருள்களைக் கவரும்படி பிறர் என்னென்னவிதமான முயற்சிகளைச் செய்யினும் அவற்றை இறுதியில் அவற்றிற்குரியவரே பெறுமாறு சர்வாந்தரியாமியாயுள்ள பகவான் கடாட்சிப்பாரென்பதை யாவரும் அறிந்து கொள்ளலாம்.

## இந்துவிவாகச் சடங்குகள் சிலவற்றின் சாஸ்திரோக்த சரித்திர பூர்வக விவரணம்.

இந்துக்களாயுள்ளநம்மனோர் விவாககாலங்களிலே அனேகசடங்குகளை நடத்திக்கொண்டுவருகிறார்களல்லவா? அவற்றின்பொருள் சிலர்க்குவிளங்காமையால் அவர்கள் அவற்றை எளனஞ்செய்வதுமன்றிச்சிலசமயங்களில் அலட்சியஞ்செய்து நிக்கிரகித்தும்விடுகிறார்கள். அவற்றின்காரணங்களைமாத்திரம் அப்படிப்பட்டவர்கள் உணருவார்களாகில் நம்முன்னோர்களுடைய கருத்து அவர்களுக்கு இனிதுவிளங்கும். விவாககாலத்தில் நடந்தேறும் ஒவ்வொருசடங்கும் சரித்திரசம்பந்தமா

கவாவது சாஸ்திரசம்பந்தமாகவாவதுள்ள ஒவ்வொரு கோட்பாட்டை விளக்குகின்றது. இந்துக்கள் அநுதியாகச்செய்துவரும் சகலகருமங்களும் மதசம்பந்தமானவைகளாகவேயிருக்கின்றன. இதனால் அவர்கள் மிகவும் தெய்வநம்பிக்கையுள்ளவர்களென்று தெரியவருகிறது. சாதாரணவிஷயங்களுக்கே மதசம்பந்தமானசடங்குகளை நடத்துவது அவர்களுடையஇயல்பென்போமானால், பெருங்காரியமாகிய விவாகத்தைப்பற்றி மதசம்பந்தமான சடங்குகள் அமிதமாயிருப்பது ஒருவியப்பன்று. மதம், ஜாதி, குலம், கோத்திரம், சூத்திரம் ஆகிய இந்தஅம்சங்கவில் சில மரபார் ஏனைய மரபாருக்கு ஒத்திராவிடினும் மொத்தத்திலே பூர்விக ஆரிய வம்சாவளியைச்சேர்ந்த தற்காலத்திய இந்துக்களுக்குள்ளே பெரும்பான்மையோர் விவாககாலங்களில் நடத்திவரும் சடங்குகள்பலவற்றுள்ளும் எல்லாமரபினருக்கும் பொதுவாயிருக்கிற முக்கியமான சில சடங்குகளின் தாற்பரியத்தைமாத்திரம் இங்கெடுத்துக்காட்டுகிறோம்:—

1. பொருத்தம்நிமித்தம் பார்க்கும் வழக்கம் சற்றேறக்குறைய இந்துக்களுக்குள்எல்லாவகுப்பாருக்குமுண்டு. கிரகங்களுக்கும் ஸ்திரீ புருஷர்களுடைய குணங்களுக்கும் சமபந்தமிருக்கிறதென்பது அநுதியாய் அவர்கள்கையாண்டுவருங்கோட்பாடாகையால் ஸ்திரீ புருஷர்களுடையஜாதகங்களைப்பார்த்து, அவற்றில்குணிக்கப்பட்டுள்ளகிரகங்களின் நிலைமைக்கேற்றபடி அவர்களுடைய குணகுணங்கள் இன்னின்னபடியிருக்கலாமென்று நிச்சயிப்பதைத்தான் பொருத்தம்பார்ப்பதென்பது. உதாரணம்:—பெண் சிங்கலக்கினத்தவளாயிருந்து பிள்ளை மேஷலக்கினத்தவனாயிருப்பானாகில் அப்படிப்பட்டவர்களுக்கு விவாகம் நடத்தப்படுமாயின் புருஷனுக்கு ஸ்திரீ அடங்கியிராளாகையால் "என்ஞான்றுங் - காதலிருவர்கருத்தொருமித் - தாதரவு - பட்டதேயின்பம்." என்னும்பிரமாணப்படி வாழ்க்கைத்துணைநலத்தை அத்தம்பதிகள் இழப்பார்களென்பது துணிபு. கிரகங்களுக்கும் மானிடருடைய குணகுணங்களுக்கும் சம்பந்தமுளதென்னுஞ்சாஸ்திரம் தற்காலத்தில் அநேகருக்கு அபத்தமாய் நகைப்புக்கிடமானதாயிருக்கினும் பூர்விகத்தில் நாகரீகம்பெற்றிருந்த எல்லாமதஸ்தர்களும் ஜாதியாரும் அச்சாஸ்திரத்தை உண்மையென்று நம்பியிருந்தனர். இப்போதும் அமாவாசை பௌர்ணிமிகாலங்களில் பைத்தியக்காரர்களுடைய வியாதி அதிகப்படுவதுமுதலிய விசித்திரங்களைநாம்காண்கிறோம். அன்றியும்வானத்திலுள்ள சிலகிரகங்களின் நிலைமை வேறுபாட்டினால் பூமியிலுள்ள சிலகற்களிலும் புஷ்பச்செடிமுதலியவற்றிலும் சிற்சில வேறுபாடுகள் தோன்றுவதைநாம் இப்போதும்பிரத்தியட்சமாகக்காணலாம். அது எவ்வாறாயினுமாகுக. கிரகங்களின்நிலைமைக்கேற்றவாறு மானிடருடைய குணங்களும்வேறுபடுகின்றனவென்பது இந்துக்களுடைய சித்தாந்தமாகையால் அவர்களுக்குள் பொருத்தம்பார்ப்பதென்னும் வழக்கம் நடைபெற்றுவருகின்றது.

மானிடர் எவ்வளவுமுயற்சிசெய்தபோதினும் கடவுளுடையஆ ணைப்படியே எல்லாம்முடியும் என்னும்நம்பிக்கை இந்துக்களுக்குப்பூ ரணமாக இருக்கிறபடியால் நிமித்தம்பார்ப்பது என்னும் வழக்கத்தை யும் அவர்கள் அநுசரிக்கிறார்கள். பிள்ளைக்குரியவர்களும் பெண்ணுக்கு ரியவர்களும் தம்முடைய இஷ்டர்களோடாவது பந்துக்களோடாவது தம்வீட்டைவிட்டு வடக்குநோக்கி இவ்வளவுதூரம் போய்த்திரும்பு வோமென்று ஒருவரையறை ஏற்படுத்திக்கொண்டுபோவதுவழக்கம். அவவாறுஅவர்கள்போகையில் அந்தவரையறைக்குள்ளாக நற்சகுன ங்கள்தோன்றுமாயின் தாங்களுத்தேசிக்கும் விவாகம்கடவுளுக்குப்பிரீ தியென்றும், அது இடையூறின்றிமுடியுமென்றும், அதனால் தம்பதி களுக்குயாதொருதுன்பமும் நேரிடாதென்றும். அவ்வாறன்றித் துர்ச் சகுனங்கள்நேரிடுமாயின் அவ்விவாகம் ஈஸ்வரப்பிரீதியன்றென்றும், அதனால் பலதுன்பங்கள்நேரிடுமென்றும் நிச்சயித்துக்கொள்ளுகிறார்க ள். அவ்வாறு அவர்கள் வடக்குத்திக்குநோக்கிப்போவதற்கும் ஒரு காரணம் உண்டு. தெற்கு யமதிசையென்பதும் வடக்கு தெய்வதிசை யென்பதும், வடக்குநோக்கித் தாங்கள்செல்லுகையில் எதிராகவரும் சகுனங்கள்யாவும் ஈஸ்வரனால் பிரேரேபிக்கப்பட்டபடி சம்பவிக்கின் றனவென்பதும் அவர்களுடையகொள்கை.

2. மாப்பிள்ளைவிவாகத்திற்குமுன்னே பரதேசம் போவதென் னும் சடங்கொன்று யாவராலும் நடத்தப்பட்டுவருகின்றது. அத ற்குக்காரணத்தைக்கூறுவோம். முற்காலத்தில் இந்துக்களுக்குள்ளே பிரமசரியம்-கிரகஸ்தம் - வானப்பிரஸ்தம்-சந்நியாசம் என்று நான்கு ஆச்சிரமங்களிருந்தன. இப்போதும் அவைஇங்குமங்குங் காணப்படி னும் முன்னிருந்தவரையறைகளும் கட்டுப்பாடுகளும் காலபேதத்தினா ல்நிலைகுலைந்திருக்கின்றன. பூர்வம்அவ்வாச்சிரமங்கள் நான்கனுள் பிரம சரியமென்னும் ஆச்சிரமத்தைச்சேர்ந்த பிரமசாரிஉலகவிஷயங்களொ ன்றுமறியாதவனாய் ஆசிரியனிடத்தே கலைஞானங்களையுணர்ந்து விரத ங்காப்போன். கிரகஸ்தமென்னும் ஆச்சிரமத்தைச்சேர்ந்தகிரகஸ்தன் மனைவியோடுங்கூடி இல்லறதருமத்தைவழாதுநடத்துவோன். வான ப்பிரஸ்தம் என்னும் ஆச்சிரமத்தை அநுஷ்டிக்கும்வானப்பிரஸ்தன் இ ல்லந்துறந்து மனைவியோடாயினும் தனித்தாயினும்வனத்தில் தவஞ் செய்வோன். சந்நியாசமென்னும் ஆச்சிரமத்திலொழுகும் சந்நியாசி உலகப்பற்றுக்கள்யாவற்றையும் முற்றத்துறந்து ஈஸ்வரத்தியானத் திலிருப்போன். ஆகையால் ஒவ்வொருபுருஷனும் மேலேசொல்லப் பட்ட ஒவ்வொருஆச்சிரமத்தையும் கடந்துபோக வேண்டுமென்பது பூர்விக ஆரியர்களுடையகோட்பாடு. ஆசிரியனிடத்துக் கலைஞானங் களையுணர்ந்தமாத்திரத்தில் பிரமசாரிக்கு ஞானோதயமாகிச் சந்நி யாச ஆச்சிரமத்தைநாடும் எண்ணமுண்டாக, க்ஷேத்திர யாத்திரை செய்யலாமென்று துணிந்துபோகத்தலைப்படும்போது ஆசிரியரும் ப ந்துக்களும் அவனைத்தடுத்து, நீபெற்றகலைஞானத்தினால் க்ஷேத்திர

யாக்கிரைசெய்து கடவுள்திருவடியடைவதற்கு வேண்டியதியானத்திலிருப்பது நியாயந்தான், அதைத்தான் ஒவ்வொருசத்புருஷனும் அடையவிரும்பவேண்டுவது, ஆயினும் இடையிலுள்ள ஆச்சிரமங்களின் தன்மை இப்படிப்பட்டதென்று நீஅநுபவித்துணர்ந்தாலன்றிச் சந்நியாசம்உனக்குநிலைபெறமாட்டாது, பிரமசாரி-வானப்பிரஸ்தன்-சந்நியாசி என்னும்மூவருக்கும் இல்வாழ்வானே பெருத்தஉபகாரியாகையால் நீ சிறிதுகாலம் கிரகாச்சிரமத்திலிருந்து அன்புடைமை - பொறையுடைமை முதலியநற்குணங்களைப்பெற்றுப் பலர்க்கும் உபகரித்துப் பிறகு வானப்பிரஸ்தனாய்ச்சிறிதுகாலமிருந்து அதன்பின்உள்ளிஷ்டப்படி சந்நியாசம்அடையலாமென்று புத்திமதிகள்கூறுவதும். அவனுடைய குணாதிசயங்களையும் கல்வியி னளவையுங்கேட்டுப் பெண்வீட்டுக்காரர் பெண்ணைக்கொடுக்க அத்தருணத்தில் இசைந்து அவனைத் தம்வீட்டுக்கு வரவழைக்கப் பிரமசாரி பெண்வீட்டுக்குப்போவதும் பூர்வீகவழக்கம். இப்போதுகாலபேதமுதலிய பலகாரணங்களினாலே அந்த ஏற்பாடுகளெல்லாந்தடுமாறிப்போனபடியால் பூர்வீகவழக்கத்திற்கு அறிகுறியாகமாப்பிள்ளைபரதேசம்போவதென்னும்வழக்கம் அநுசரிக்கப்பட்டுவருகிறது. இவ்வாறு பரதேசம் போகத்தலைப்பட்டபிரமசாரிக்குமுற்காலத்தில்ஆசாரியரே புத்திமதிகள் கூறிவந்ததுபோல் இப்போது அத்தருணத்தில் புரோகிதராவது குலகுருவாவது மாப்பிள்ளைக்குப் புத்திமதிசொல்லும் பாவனையாகச் சடங்கு நடத்தப்படுகின்றது. விவாகச் சடங்கு நடத்தப்படுவதற்கு முன்னர் க்ஷவரஞ் செய்வித்தல் முதலிய கருமங்களெல்லாம் மாப்பிள்ளைக்குப் பிரமசாரி விரதங்கழிப்பதற்கு அறிகுறியாகும்.

(இன்னும் வரும்.)

---

## வர்த்தமானக் குறிப்புகள்.

---

அநுகூலமான ஒரு சட்டம்.—எவனுக்காவது ஏழு குழந்தைகள் பிறந்து ஜீவித்திருக்குமானால் அவன் அநேகவரிகளைக் கொடுக்கவேண்டியதில்லையென்கிற சட்டமொன்று ப்ரான்ஸ்தேசத்தில் உண்டாயிருக்கிறது. இதைப்போன்ற சட்டம் நம்தேசத்தில் உண்டாகுமானால் பெருங் குடும்பிகளுக்கு அநுகூலமாயிருக்குமென்பதற்கு ஐயமில்லை.

**கண்ணிலா நியாயவாதி.**—பூனாவிலே முழுவதும் அந்தகராயுள்ளநாராயணபோஸ்.என்பவர் மிகவும் திறமையுடன் ஹைகோர்ட்டில் நியாயவாதம் செய்துவருகிறார். அவருடைய சாமர்த்தியத்தைவியந்து அநேக கட்சிக்காரர் அவரிடத்தில் போகின்றார்கள், இது வியக்கத்தக்கதே!

---

PRINTED AT THE ALBINION PRESS—MADRAS.

...த்திய ச...

...படுவதற்கான

1890 வருஷத்துக்காக சந்தாத்தொகைகளை ...

...பக்காரர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோ...

...கொண்டேயிருக்கு சஞ்சிகைகள் வெளியாகு...

...டுவொட்டாதும்.

சந்தா விவரம். 17

| | |
|---|---|
| | ரூ. |
| முன்னதாகச் செலுத்தவேண்டிய ஒரு வருஷத்திய சந்தா தொகை. | 1—8 |
| ஒரு வருஷத்துக்கு தபால் செலவு........................ | 0—6— |

(முன்னதாகச் செலுத்தவேண்டிய ஒரு வருஷத்திய ச... தொகையை எப்போதாவது செலுத்தி, தபால் ... கையாகச் சேர்த்து, அவ்வருஷத்திய சஞ்சிகைக... கொள்ளலாம்.)

☞ கடிதங்கள் - சந்தா தொகைகள் முதலிய யாவற்றை... ...ராஸ் ஸ்கூல் புக் அண்டு வர்நெக்யுலர் லிட்டரேச்சர் ஸொஸை... என்னும் பழைய சபையின் புத்தகசாலையின் காரியதரிசிக்கு ... வேண்டியது.

14862

